
தினபூமி
thinaboomi.com
பூமி: 21 சுற்று: 194 ஆனி 24
RNI Regn. No. 61494/94
வேலூர், செவ்வாய், ஜூலை 08, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



## பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளுக்கு கூடுதலாக 10 சதவீதம் வரி விதிப்பு: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை

...2-ம் பக்கம்

## உலகின் கவனத்தை கவர்ந்த இந்திய பாதுகாப்புத்துறை: மத்திய அமைச்சர் பெருமிதம்

...3-ம் பக்கம்

## வெளிநாட்டு மைதானத்தில் மிகப் பெரிய டெஸ்ட் வெற்றியை பதிவு செய்த இந்திய இளம் அணி

...6-ம் பக்கம்





● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ரூ.36 கோடியே 62 லட்சம் செலவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடம், ரூ.17 கோடியே 52 லட்சத்து 33 ஆயிரம் செலவில் 4 வட்டாட்சியர் அலுவலக கட்டிடங்கள் மற்றும் ரூ.65 லட்சத்து 76 ஆயிரம் செலவில் 2 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிடங்கள் என மொத்தம் ரூ.54 கோடியே 80 லட்சத்து 10 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

### பள்ளி-கல்லூரி மாணவர்களுக்கான அரசு விடுதிகள் இனி

# ‘சமூக நீதி விடுதிகள்’ என அழைக்கப்படும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூலை 08-

**தமிழகம் முழுவதும் பல்வேறு அரசுத் துறைகளின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள் இனி ‘சமூக நீதி விடுதிகள்’ என அழைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும் உரிமைகள், சலுகைகள், உதவிகள் அனைத்தும் அப்படியே தொடரும். அதில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

**எல்லார்க்கும் எல்லாம்...**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: ரத்த பேதம் இல்லை, பால் பேதம் இல்லை என்பதுதான் திராவிட இயக்கத்தின் தோற்றத்துக்கு அடிப்படையான கருதுகோள்கள்! இத்தகைய சமூகநீதியை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியைத் தான் ‘திராவிட மாடல் ஆட்சி’ என்ற அடையாளத்துடன் நாம் நடத்தி வருகிறோம். ‘எல்லார்க்கும் எல்லாம்’ கிடைக்கும் சமநீதியை நிலைநாட்டுவதாக நமது அனைத்துத் திட்டங்களும் முயற்சிகளும் அமைந்துள்ளன. சாதியின் பேரால், மதத்தின் பேரால், பொருளாதார வலிமையின்மையால் எந்த வாய்ப்பும் யாருக்கும் மறுக்கப்படக் கூடாது என்பதை மனதில் வைத்தே, அனைவருக்கும் பொதுவான சம வாய்ப்புகளை வழங்கி, அனைத்துச் சமூகத்தையும் மேலே கொண்டு வர முயற்சித்து வருகிறோம். அனைத்துத் துறை வளர்ச்சியானது, அனைத்து சமூக வளர்ச்சியாக இன்று விரிவடைந்து வருவதையும் பார்க்கிறோம்.

> **தற்கால இளம் சந்ததியினர் அனைவரும் சாதி வேறுபாடின்றி ஒன்றிணைந்து, எதிர்கால தமிழ்ச் சமுதாயத்தை, சமத்துவச் சமுதாயமாகக் கட்டமைத்திட இந்த முயற்சிகள் அடித்தளம் அமைக்கும். சமூக நீதி சமநீதி சட்ட நீதி ஆகியவை அனைவர்க்கும் பொது என்ற நிலையை உருவாக்க திராவிட மாடல் அரசு தொடர்ந்து பங்காற்றும்**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**நீக்குவதற்கு நடவடிக்கை...**

சாதி வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் முற்றிலுமாக விலக்கும் பயணத்தின் பல்வேறு படிநிலைகளை நாம் படிப்படியாகத் தாண்டி வர வேண்டும். இதற்கான முயற்சிகளில் திராவிட மாடல் அரசு தொடர்ந்து பயணித்து வருகிறது. தமிழ்நாடு சட்டப்பேரவையில் 29.04.2025 அன்று நான் பேசும் போது, “இந்த மண்ணின் ஆதிக்குடிகளை இழிவுபடுத்தும் அடையாளமாகக் காலனி என்ற சொல் பதிவாகியிருக்கிறது. ஆதிக்கத்தின் அடையாளமாகவும் தீண்டாமைக்கான குறியீடாகவும் வசைச் சொல்லாகவும் இது மாறியிருப்பதால் இனி இந்தச் சொல் அரசு ஆவணங்களிலிருந்தும், பொதுப் புழக்கத்திலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்” என்று குறிப்பிட்டேன்.

**வழிமுறைகள் வகுக்கப்பட்டு...**

இதனைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து வைத்த கோரிக்கைகளில் மிக முக்கியமானது, “ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் உள்ள சாதிப் பெயரில் இறுதி எழுத்தில் முடிவடையும் ‘N’ மற்றும் ‘A’ என்பதற்குப் பதிலாக ‘R’ என பெயர் மாற்றம் செய்து மக்களுக்கு உரிய மரியாதையைக் கிடைக்க வழி செய்யும் வண்ணம் உரிய சட்டம் இயற்ற, விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்” என்பதாகும். கடந்த 25.6.2025 அன்று பள்ளிக் கல்வித் துறையின்

(கடைசி பக்கம் பார்க்க)

### மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட

# 4 அறிக்கைகள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் சமர்ப்பிப்பு

சென்னை, ஜூலை 08-

**மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட தமிழ்நாட்டில் கட்டமைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் காலநிலை- பத்தாண்டுகளுக்கான மதிப்பீடு உள்ளிட்ட 4 அறிக்கைகள் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கப்பட்டது.**

மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 4 அறிக்கைகள் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் நேற்று வழங்கப்பட்டது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று (7.7.2025) தலைமைச் செயலகத்தில், துணை முதல்வரும், மாநில திட்டக் குழுவின் அலுவல் சார் துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன் ஆகியோர் சந்தித்து, மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட - தமிழ்நாட்டில் பயன்பாட்டில் இல்லாத சுரங்கங்களின் மறுசீரமைப்பு சாத்திய கூறுகளை மதிப்பீடு செய்தல், குழந்தைகளின் ஊட்டச்சத்து - முக்கிய சவால்களும், தீர்க்கும் உத்திகளும், தமிழ்நாட்டில் இரண்டாம் நிலை நகரங்களில் நகர்ப்புற மீள்தன்மையை மேம்படுத்துவதற்கான இயற்கை அடிப்படையிலான தீர்வுகளின் கட்டமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வெப்பம் அழுத்தம்: தமிழ்நாட்டில் கட்டமைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் காலநிலை- பத்தாண்டுகளுக்கான மதிப்பீடு ஆகிய நான்கு அறிக்கைகளை வழங்கினர்.

மாநில திட்டக்குழுவானது தமிழ்நாடு முதல்வர் தலைமையில் செயல்படும் ஓர் உயர்மட்ட ஆலோசனைக் குழுவாகும். தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடி மக்கள் நல திட்டங்களை மதிப்பீட்டு ஆய்வு செய்தல் மற்றும் அரசு ஆளுகையில் எழும் புதிய தேவைகளுக்கேற்ப கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், பல்வேறு ஆய்வுகள் நடத்தி அறிக்கை தயாரிப்பதிலும் தனது பங்களிப்பை மாநில திட்டக்குழு நல்கி வருகிறது.

# 16 ஆண்டுகளுக்கு பிறகு திருச்செந்தூர் கோவில் மகா கும்பாபிஷேகம் கோலாகலம்

திருச்செந்தூர், ஜூலை 08-

**16 ஆண்டுகளுக்கு பிறகு திருச்செந்தூர் கோவில் மகா கும்பாபிஷேகம் நேற்று கோலாகலமாக நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.**



தமிழ் கடவுளான முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடாகவும், கடற்கரையோரம் அமைந்துள்ள கோவில்களில் மிகவும் சிறப்பு பெற்ற தலமாகவும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் விளங்குகிறது. இந்த கோவிலில் கடந்த 2009-ஆம் ஆண்டு கும்பாபிஷேக விழா நடந்தது. அதன் பிறகு கும்பாபிஷேக விழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வந்தது.

இதற்கிடையே, திருச்செந்தூர் கோவிலை திருப்பதிக்கு இணையாக மாற்றும் வகையில், கடந்த 2022-ம் ஆண்டு ரூ.300 கோடி மதிப்பில் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பெருந் திட்டவளாகப் பணிகள் தொடங்கியது. இதில் பல்வேறு திட்டப் பணிகள் முடிவுற்றதைத்தொடர்ந்து கும்பாபிஷேக விழா நடத்து வதற்கான ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டது. அதன்படி சுமார் 15 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு ஜூலை 7-ம் தேதி(நேற்று) கும்பாபிஷேக விழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் விரைந்து நடந்தது.

இதைத்தொடர்ந்து கோவிலின் மேற்கு கோபு ரத்தின் அருகே கடந்த 40 நாட்களுக்கு முன்பு யாக சாலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கியது. சுமார் 8 ஆயிரம் சதுர அடி யில் பிரம்மாண்ட யாக சாலை பக்தர்களை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டது. அங்கு கடந்த 1-ந் தேதி முதல் யாக சாலை பூஜைகள் தொடங்கி நடைபெற்றது. சுவாமி சண்முகருக்கு ராஜகோபுர வாசல் அருகே 8 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் பிரமாண்ட யாகசாலை அமைக்கப்பட்டு சுவாமி சண்முகருக்கு 49, ஜெயந்திநாதர் 5, நடராஜர் 5, பெருமாள் 5 மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு 12 என மொத்தம் 76 குண்டங்களில் சுமார் 400 கும்பங்கள் வைக்கப்பட்டு காலை, மாலை என ஒவ்வொரு யாக சாலை பூஜைகள் நடைபெற்று வந்தன.

நேற்று முன்தினம் காலை 10-ம் கால யாகசாலை பூஜை, மாலையில் 11-ம் கால யாக சாலை பூஜை மற்றும்

(கடைசி பக்கம் பார்க்க)

# 17 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை நாடு தழுவிய வேலை நிறுத்தம்

## முக்கிய தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

சென்னை, ஜூலை 08-

**நாடு தழுவிய அளவில் வரும் 9-ம் தேதி நடைபெறவுள்ள நாடு தழுவிய வேலைநிறுத்தத்தில் தொ.மு.ச, சி.ஐ.டி.யு, ஏ.ஐ.டி.யு.சி உள்ளிட்ட 13 முக்கிய தொழிற்சங்கங்கள் பங்கேற்க உள்ளதாக அறிவித்துள்ளன.**

விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மை, தொழிலாளர் விரோத சட்டங்கள் உள்ளிட்ட 17 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய அளவிலான வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. நாடு தழுவிய வேலைநிறுத்தத்தில் தொ.மு.ச, சி.ஐ.டி.யு, ஏ.ஐ.டி.யு.சி உள்ளிட்ட 13 முக்கிய தொழிற்சங்கங்கள் பங்கேற்க உள்ளதாக அறிவித்துள்ளன. இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், அரசுப் பேருந்து மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள், மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் எனக் கூறப்படுகிறது.

தொழிற்சங்கங்கள் முன் வைத்துள்ள 17 அம்சக் கோரிக்கைகளில், ஊதிய உயர்வு, பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்குவதைக் கைவிடுதல், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் இடம் பெற்றுள்ளன. இந்த கோரிக்கைகள் நிறைவேற்றாவிட்டால் போராட்டங்கள் தொடரும் என தொழிற்சங்கத் தலைவர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில், இந்த வேலை நிறுத்தத்தில், வங்கி ஊழியர்கள் பங்கேற்பார்கள் என வங்கி ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அகில இந்திய வங்கி ஊழியர்கள் சங்கத்துடன் இணைந்த வங்காள மாகாண வங்கி ஊழியர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வங்கித் துறை தொழிற்சங்கங்கள் புதன்கிழமை நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தில் இணைய முடிவு செய்துள்ளது. மத்திய அரசின் கார்ப்பரேட் சார்பு பொருளாதார சீர்திருத்தங்கள், தொழிலாளர் விரோதக் கொள்கைகளை எதிர்த்து அனைத்துத் தொழில்களிலும் உள்ள 15 கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திருப்புவனம் காவலாளி அஜித்குமார்

# கொலை வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றிய உத்தரவு தமிழக அரசிதழில் வெளியீடு

சென்னை, ஜூலை 08-

**திருப்புவனம் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அதிகாரப்பூர்வமாக தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் விசாரணையை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

சிவகங்கை மாவட்டம் மடப்புரத்தைச் சேர்ந்தவர் அஜித்குமார் (வயது 27). இவர் மடப்புரம் பத்திரகாளியம்மன் கோவிலில் கடந்த 3 மாதங்களாக காவலாளியாக பணியாற்றி வந்தார். கடந்த ஜூன் மாதம் 27-ந்தேதி அந்த கோவிலுக்கு வந்த நிகிதா என்பவரின் காரில் இருந்த 10 பவுன் நகை மாயமானதாக சொல்லப்படுகிறது. இதுதொடர்பாக கொடுத்த புகாரின் அடிப்படையில் அஜித்குமாரை போலீசார் விசாரித்தனர்.

மறுநாள் 28-ந்தேதியன்று அவரது சகோதரர் நவீன், காரை இயக்கிய ஆட்டோ டிரைவர் அருண் ஆகியோரை திருப்புவனம் போலீஸ் நிலையத்திற்கு போலீசார் அழைத்துச் சென்று விசாரித்தனர். நகை மாயமானது பற்றி தெரியாது என்று கூறியதைத் தொடர்ந்து அவர்கள் 2 பேரையும் போலீசார் விடுவித்து விட்டனர். இந்த நிலையில் அஜித்குமாரை கோவிலுக்கு பின்புறமுள்ள கோசாலை பகுதியில் வைத்து விசாரித்தனர். அப்போது அவர்கள் அஜித்குமாரை தடியால் சரமாரியாக அடித்தனர். இதில், அஜித்குமார் மயங்கி விழுந்தார்.

இதையடுத்து அவரை சிவகங்கை மற்றும் மதுரை மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக போலீசார்

(கடைசி பக்கம் பார்க்க)

### தமிழ்நாடு முழுவதும்

# சாலை பணிகளுக்கு ரூ.7,500 கோடி ஒதுக்கீடு


சென்னை, ஜூலை 08-

**தமிழ்நாடு முழுவதும் சாலை, மேம்பால பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.7,500 கோடி ஒதுக்கீடு செய்து அரசு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.**

தமிழ்நாடு அரசின் நிதி நிலை அறிக்கை மற்றும் நெடுஞ்சாலைத்துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 14 புறவழிச்சாலைகள் அமைப்பதற்காக ரூ.1,713 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆற்றுப்பாலம் சாலை விரிவாக்கம், மழைநீர் வடிகால் பணிகளுக்கு ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆத்தூர், ஓசூரில் புறவழிச்சாலை அமைக்க ரூ.500 கோடி, ஆறுகளின் குறுக்கே 6 உயர்மட்ட சாலை அமைக்க ரூ.295 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கோவையில் ரூ.348 கோடியில் 12.5 கி.மீ. புறவழிச் சாலை, நெல்லையில் ரூ.225 கோடியில் 12.4 கி.மீ. புறவழிச் சாலை அமைக்கப்பட உள்ளது. விருத்தாசலம் - தொழுதூர், கொடை-வத்தலகுண்டு, சிவகாசி-விருதுநகர் சாலைகள் 4 வழிச்சாலைகளாக மேம்படுத்தப்பட உள்ளன.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| ↑ 9.61 | ↑ 0.30 |
| பாயிண்ட் 83,442.50 | பாயிண்ட் 25,461.30 |



**தங்கம்**
1 சவரன் ₹72,080
1 கிராம் ₹9,010



**வெள்ளி**
1 கிலோ ₹120,000
1 கிராம் ₹120.00

**டாலர்** ₹85.83

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளுக்கு கூடுதலாக 10 சதவீதம் வரி விதிப்பு

## அதிபர் டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஜூலை 08-**

அமெரிக்க விரோத கொள்கைகளை ஆதரிக்கும் நாடுகளுக்கு கூடுதலாக 10% வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் எச்சரித்துள்ளார்

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது ட்ரூத் சமூகவலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது: “பிரிக்ஸ் கூட்டமைப்பின் அமெரிக்க விரோத கொள்கைகளை ஆதரிக்கும் எந்தவொரு நாட்டுக்கும் கூடுதலாக 10 சதவீதம் வரி விதிக்கப்படும். இதில் எந்தவொரு மாற்றத்துக்கும் இடமில்லை. இந்த எச்சரிக்கைக்கு கவனம் செலுத்துவோர்க்கு நன்றி.” என்று பதிவிட்டுள்ளார்.



எனினும், எந்த மாதிரியான நடவடிக்கைகள் அமெரிக்க விரோதக் கொள்கைகள் என்பது பற்றி ட்ரம்ப் எதுவும் விரிவாக பதிவிடவில்லை. டொனால்டு ட்ரம்ப் அமெரிக்க அதிபராக பதவியேற்றதில் இருந்தே பல்வேறு நாடுகள் மீதும் அதிரடியாக வரி விதித்து வருகிறார். டிரம்பின் இந்த வரி விதிப்பு நடவடிக்கைகளால் சர்வதேச அளவில் பொருளாதார ரீதியாக நெருக்கடி ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா மற்றும் தென் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து பிரிக்ஸ் கூட்டமைப்பை உருவாக்கி உள்ளன.bஇதில் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேஷியா ஆகிய நாடுகள் கூடுதல் உறுப்பினர்களாக இணைந்துள்ளன. பிரிக்ஸ் அமைப்பின் 17-வது உச்சி மாநாடு பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இத்தகைய சூழலில்தான் மேற்கண்ட எச்சரிக்கையை ட்ரம்ப் விடுத்து இருக்கிறார்.

# தலாய் லாமாவிற்கு பிரதமர் மோடி பிறந்தநாள் வாழ்த்து - சீனா எதிர்ப்பு

**பெய்ஜிங், ஜூலை 08-**

தலாய் லாமாவிற்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தது தொடர்பாக சீனா தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.

தலாய் லாமாவிற்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தது தொடர்பாக சீனா தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளது. இது குறித்து சீனாவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மாவோ நிங் செய்தியாளர்களிடம் கூறியதாவது;-

14-வது தலாய் லாமா அரசியல் ரீதியாக நாடு கடத்தப்பட்டவர். அவர் நீண்ட காலமாக பிரிவினைவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். மேலும் மதத்தின் பெயரில் சீனாவிடம் இருந்து திபெத்தை பிரிக்க முயன்றார். திபெத் தொடர்பான பிரச்சினைகளில் இந்தியா மிகுந்த அக்கறையுடனும், விவேகத்துடனும் செயல்பட வேண்டும். சீனாவின் உள் விவகாரங்களில் தலையிட இந்த பிரச்சினையை பயன்படுத்துவதை இந்தியா நிறுத்த வேண்டும். இது தொடர்பாக இந்தியாவிடம் சீனா தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தலாய் லாமாவுக்கு பாரத ரத்னா:

# 80 எம்.பி.,க்கள் ஆதரவு



**புதுடில்லி, ஜூலை 08-**

புத்த மதத்தலைவர் தலாய் லாமாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க ஆதரவாக 80 எம்.பி.,க்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

திபெத்தை சேர்ந்த புத்த மதத்தலைவர் தலாய் லாமா, சீனாவின் அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவில் தஞ்சம் புகுந்து ஹிமாச்சல பிரதேசத்தில் வசித்து வருகிறார். 90 வயதான தலாய் லாமாவுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட வேண்டும் என திபெத் தொடர்பான இந்திய பார்லிமெண்ட் மன்றம் வலியுறுத்தி வருகிறது. இதற்கு 80 எம்.பி.,க்கள் ஆதரவாக கையெழுத்திட்டு உள்ளனர்.

திபெத் தொடர்பான அனைத்துக் கட்சி இந்திய பார்லிமென்ட் மன்றம், திபெத் அரசின் பிரதிநிதிகளை பலமுறை சந்தித்துள்ளது. இந்த குழுவின் ஒருகிணைப்பாளராக உள்ள பா.ஜ., ராஜ்யசபா எம்.பி., சுஜீத் குமார் கூறியதாவது: ஆன்மிக தலைவர் தலாய் லாமாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க கோரி 80 எம்.பி.,க்கள் கையெழுத்திட்டு உள்ளனர். 100 எம்.பி.க்களின் கையொப்பங்களைச் சேகரித்து முடிந்தவுடன் சமர்ப்பிக்கப்படும். இந்த குறிப்பாணையில் கையொப்பமிட்டவர்களில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்களும் அடங்குவர். தலாய் லாமாவின் புதிய வாரிசை நியமிப்பதில் சீனாவுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று மன்றம் உறுதியாக நம்புகிறது. திபெத் தொடர்பான பிரச்னைகளை எழுப்ப முடிவு செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சட்டசபை தேர்தல் சுற்றுப்பயணம்:

# கோவையில் தொடங்கினார் இ.பி.எஸ்.



**கோவை, ஜூலை 08-**

கோவையில் சுற்றுப்பயணத்தை தொடங்கினார் எடப்பாடி பழனிசாமி.

2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணத்தை தொடங்கினார். மேட்டுப்பாளையத்தில் இருந்து எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணத்தை தொடங்கினார். வனபத்திரகாளி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு சுற்றுப்பயணத்தை தொடங்கினார். மேட்டுப்பாளையத்தில் தொடங்கிய எடப்பாடி பழனிசாமி பரப்புரை ஜூலை 23ல் பட்டுக்கோட்டையில் நிறைவுபெறும். எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொண்ட நிலையில் அவருக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிசாமி 33 சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரை மேற்கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து, நேற்று காலை 10.30 மணியளவில் விவசாயிகளைச் சந்தித்து பேசினார். அடுத்ததாக, பிளாக் தண்டர் செல்லும் எடப்பாடி பழனிசாமி, மாலை 4.35 மணியளவில் பிளாக் தண்டர் முதல் ஊட்டி சாலை காந்தி சிலை வரையில் ரோடு ஷோ சென்றார்.



**இரட்டைமலை சீனிவாசன் பிறந்ததினத்தையொட்டி, சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு தமிழக வெற்றிக்கழக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். சென்னை தெற்கு (தெற்கு) மாவட்ட செயலாளர் கே.வி.தாமு முன்னிலையில் இந்த நிகழ்ச்சியில் சென்னை மத்திய மாவட்ட செயலாளர் பூக்கடை எஸ்கேஎம் குமார், நிர்வாகிகள் ஆர்.கோபி, ஆர். விக்கி மற்றும் திரளானோர் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்.**

## ரபேல் குறித்து அவதூறு:

# சீனா மீது பிரான்ஸ் குற்றச்சாட்டு

**பாரிஸ், ஜூலை 08-**

ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலுக்குப் பிறகு உலக நாடுகளிடையே வரவேற்பை பெற்ற ரபேல் போர் விமானம் குறித்து சீனா போலியான தகவலை பரப்பி வருவதாக பிரான்ஸ் குற்றம்சாட்டியுள்ளது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தானுக்குள் புகுந்து இந்தியா நடத்திய தாக்குதலுக்கு ரபேல் போர் விமானங்கள் முக்கிய பங்காற்றின. இதையடுத்து, பிரான்ஸ் தயாரிப்பான ரபேல் போர் விமானங்களுக்கு உலகளவில் மவுசு கூடியது. ரபேல் போர் விமானங்களை கொள்முதல் செய்ய பல்வேறு உலக நாடுகள் ஒப்பந்தம் செய்து வருகின்றன. இதுவரையில் பிரான்ஸின் டசால்ட் ஏவியேஷன் நிறுவனம் 533 ரபேல் விமானங்களை விற்பனை செய்துள்ளது.

இந்த நிலையில், தங்களின் முதன்மை போர் விமானமான ரபேலின் விற்பனையை சீர்குலைக்கவும், சீன போர் விமானங்களின் விற்பனையை அதிகரிக்கும் வகையில் சீனா செயல்பட்டு வருவதாக பிரான்ஸ் குற்றம் சாட்டியுள்ளது. ஆபரேஷன் சிந்தூரின் போது, இந்தியா பயன்படுத்திய ரபேல் போர் விமானம் பாகிஸ்தானால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக, பொய்யான தகவல்களை சீனா பரப்பி வருகிறது. இது பிரான்ஸ் நாட்டுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருப்பதாவது; பிரான்ஸின் ரபேல் போர் விமானங்களின் விற்பனையை குறைக்க சீனா முயற்சிக்கிறது. இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையேயான போரில் ரபேல் விமானத்தின் செயல்பாடு மோசமாக இருந்ததாக தவறான தகவலை பரப்பி வருகின்றனர். சீனா ராணுவ உபகரணங்களை விற்பனையை அதிகரிக்க இந்த செயலில் ஈடுபட்டு வருகின்றனர், என தெரிவித்துள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் போரின் போது புதிதாக 1,000 சமூக வலைதளப்பக்க கணக்குகள் தொடங்கப்பட்டு, சீனா ராணுவ தொழில்நுட்பம் குறித்து ஆதரவு கருத்துக்கள் பகிரப்பட்டதாகவும் பிரான்ஸ் குற்றம் சாட்டியுள்ளது.

## சட்டவிரோத குடியேற்றம்:

# டெல்லியில் 18 வங்கதேசத்தினர் கைது

**புதுடில்லி, ஜூலை 08-**

டில்லியில் சட்டவிரோதமாக வசித்து வந்த, வங்கதேசத்தினர் 18 பேர் உட்பட வெளிநாட்டினர் 29 பேரை போலீசார் கைது செய்தனர்.

அவர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட்டு உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டில்லியில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் வங்கதேசத்தினரை கண்டுபிடித்து வெளியேற்றும் நடவடிக்கை தீவிரமாக நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக பல்வேறு பகுதியில் போலீசார் மற்றும் அரசு அதிகாரிகள் வீடு வீடாக சோதனை நடத்தினர். அப்போது வங்கதேசத்தினர் போலி ஆவணங்களை பயன்படுத்தி வசித்து வருவதை போலீசார் கண்டறிந்தனர்.

சந்தேகத்திற்குரிய நபர்களிடம் போலீசார் துருவி துருவி விசாரணை நடத்தினர். ஆனால் அவர்கள் போலீசாரை குழப்பும் வகையில், முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தனர். அவர்கள் வங்கதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதி செய்யப்பட்டது.

இவ்வாறு பிடிபட்ட வங்கதேசத்தினர் 18 பேர் உட்பட 29 வெளிநாட்டினரை போலீசார் கைது செய்தனர். அவர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட்டு உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஐ.எஸ்.ஐ. அமைப்புடன் தொடர்பு:

# ராணா பரபரப்பு வாக்குமூலம்

**மும்பை, ஜூலை 08-**

மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்கும் ஐ.எஸ்.ஐ. அமைப்புக்கும் இடையேயான தொடர்பு குறித்து தஹாவூர் ராணா வாக்குமூலம் அளித்துள்ளார்.


2008-ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 166 பேர் பலியாகினர். லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத இயக்கம் நடத்திய இந்தத் தாக்குதலில், பாகிஸ்தானை பூர்விகமாக கொண்ட தஹாவூர் ராணா கூட்டுச் சதியில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டது. இவர் லஷ்கர்-ஏ-தொய்பா இயக்கத்துக்கு நிதியளிப்பது உள்ளிட்ட உதவிகளை செய்தது நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரை குற்றவாளி என்று அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்து, லாஸ் ஏஞ்சலீஸ் சிறையில் அடைத்தது. இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டதை தொடர்ந்து, கடந்த ஏப்ரல் மாதம் இந்தியாவுக்கு தஹாவூர் ராணா நாடுகடத்தப்பட்டார். தஹாவூர் ராணாவை காவலில் எடுத்த தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) அதிகாரிகள், தொடர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான ஆழமான தொடரபை தஹாவூர் ராணா வாக்குமூலமாக அளித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், தாக்குதல் நடந்த சமயத்தில் தான் மும்பையில் இருந்தது தற்செயலானது கிடையாது, தாக்குதல் திட்டத்தின் ஒரு பகுதி என்றும் தாக்குதல் நடத்திய இடத்தை முன்னதாகவே உளவு பார்த்ததாகவும் தஹாவூர் தெரிவித்துள்ளார்.

அதேபோல், தானும் டேவிட் ஹெட்லியும் லஷ்கர்-இ-தொய்பாவின் பயற்சியைப் பெற்றதையும், மும்பை தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா முதன்மை உளவு அமைப்பாக செயல்பட்டு, ஐஎஸ்ஐ அமைப்புடன் ஒருங்கிணைந்து தாக்குதல் திட்டத்தை மேற்கொண்டதாக மும்பை குற்றப்பிரிவிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில், மும்பை காவல்துறையினர் ராணாவை கைது செய்து காவலில் எடுப்பதற்கான பணிகளை விரைவு படுத்தியுள்ளது.

**08-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** மாற்றம் ஒன்றே மாறாதது. எனவே, மாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**ரிஷபம்:-** புகழ், மரியாதை கூடும். பெரிய மனிதர் எனப் பெயரெடுப்பர். சாஸ்திர அறிவு கூடும். சந்ததி விருத்தி உண்டு. அரசு துறைகள் மூலம் ஆதாயங்கள் பெருகும். உறவினர் உதவுவர். எதிர்பார்த்தபடி நிலுவைகள் வசூலாகும்.

**மிதுனம்:-** சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மகான்களின் ஆசியும், நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்:-** சுகமும், பாக்கியமும் விருத்தியாகும். மனதில் உறுதியும், புதிய உற்சாகமும் உண்டாகும். மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும் குழந்தைகள் மீது அன்பும், பாசமும் பெருகும்.

**சிம்மம்:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்ய வேண்டிய நாள். வாகன சுகம் குறையும். தனவரவும் தூக்கமும் குறையும்.

**கன்னி:-** மனத்தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள். தனலாபம், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும் நாள். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும் நாள்.

**துலாம்:-** சுமாரான நாள். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய நாள். படிப்பில் அதிக கவனம் தேவை. அலட்சியம் அல்லல் தரலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடலாம்.

**விருச்சிகம்:-** பெரியோர் நேசம், வாகன யோகம், பதவி உயர்வு, மனத் திருப்தி, தொழில், வியாபாரத்தில் பணவரவு என இராஜயோகங்கள் தரும் நாள். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

**தனுசு:-** வாயை அடக்கி வம்புக்கு செல்லாதிருப்பது சுகம். பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மனம் போன போக்கில் அலைய நேரும்.

**மகரம்:-** ஆரோக்கியம் மேம்படும், மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவார். வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு தனலாபம் உண்டு. பெண்களால் ஆண்களுக்கு ஆதாயம் ஏற்படும்.

**கும்பம்:-** சிலருக்கு திடீர் பயணங்கள் ஏற்படும், தெய்வபக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்., சுகமும் சந்தோஷமும் அதிகரிக்கும். வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும்.

**மீனம்:-** இன்று, இனிய வாகன யோகம் ஏற்படும். காதல் வயப்படும் நாள். இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும் நாள். அரசால் ஆதாயம் உண்டு. இந்த நாள் இனிய நாள்.

## டெக்சாஸ் கனமழை, வெள்ளம்:

# பலி எண்ணிக்கை 82 ஆக உயர்வு; பேரிடராக அறிவித்தார் ட்ரம்ப்..!

**டெக்சாஸ், ஜூலை 08-**

டெக்சாஸ் மாகாணத்தில் கனமழையால் பலி எண்ணிக்கை உயர்ந்து வரும் வேளையில், அதை இயற்கை பேரிடராக அந்நாட்டு அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள கெர்கவுண்டியில் பெய்த கனமழை அங்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தொடக்கத்தில் மழை, வெள்ளத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கையானது ஒற்றை இலக்கத்தில் இருந்தது. இந்தியா உள்ளிட்ட பிரிக்ஸ் நாடுகளுக்கு 10 சதவீதம் கூடுதல் வரி அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு இந்தியா உள்ளிட்ட பிரிக்ஸ் நாடுகளுக்கு 10% கூடுதல் வரி; அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு பின்னர் படிப்படியாக அதிகரித்து கிட்டத்தட்ட பலி எண்ணிக்கை 82 ஆக உயர்ந்துள்ளது. காணாமல் போனவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ள கர்கவுண்டியில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கிறது.

இந் நிலையில் பெரும் சேதம், உயிரிழப்பு எதிரொலியாக இதை பேரிடராக அந்நாட்டு அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதுதொடர்பான கோப்பில் அவர் கையெழுத்திட்டுள்ளார். ஏராளமான குடும்பங்கள் கற்பனை செய்து முடியாத ஒரு சோகத்தை தாங்கி வருகின்றன. பல உயிர்கள் பறிபோயுள்ளன, இன்னமும் பலரை காணவில்லை என்று கூறி உள்ளார். பெரும் பாதிப்பை சந்தித்துள்ள டெக்சாஸ் மாகாணத்திற்கு அதிபர் ட்ரம்ப் விரைவில் வந்து பார்வையிட இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்து இருக்கின்றனர்.

## நடுக்கடலில் தத்தளித்த

# இந்திய மீனவர்கள் 4 பேரை மீட்ட இலங்கை கடற்படை

**கொழும்பு, ஜூலை 08-**

நடுக்கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் 4 பேரை இலங்கை கடற்படை பத்திரமாக மீட்டது.

இந்தியாவின் லட்சத்தீவுகளில் உள்ள மினிகோய் என்ற சிறிய தீவை சேர்ந்த 4 மீனவர்கள், கடந்த ஜூன் 29-ந்தேதி மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்றனர். அவர்கள் சென்ற மீனவ படகு, மோசமான வானிலை காரணமாக கரைக்கு திரும்ப முடியாமல் நடுக்கடலில் சிக்கிக் கொண்டது. தகவல் தொடர்பு சாதனங்கள் எதுவும் வேலை செய்யாததால், படகில் இருந்த மீனவர்களால் கரைக்கு எந்த தகவலும் அனுப்ப முடியவில்லை. இந்நிலையில், காணாமல் போன மீனவ படகு குறித்து இலங்கை கடற்படைக்கு மும்பை கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் தகவல் அனுப்பியது. இதையடுத்து இலங்கை கடற்படை சார்பில் ஒருங்கிணைந்த தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின் மூலம், நடுக்கடலில் தத்தளித்த 4 மீனவர்கள் இலங்கை கடற்படையால் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட 4 மீனவர்களும் இலங்கையின் திகோவிட்டா துறைமுகத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் வட்டாலா காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இலங்கை கடற்படை மற்றும் கடலோர காவல்படை சார்பில் அவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2 வாரங்களில் மும்பை கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் மற்றும் இலங்கை கடற்படை சார்பில் 2 முறையாக இந்திய மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# பஞ்சாபில் பஸ் கவிழ்ந்து 8 பேர் பலி

**சண்டிகர், ஜூலை 08-**

பஞ்சாபில் பஸ் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 30 பேர் படுகாயம் அடைந்தனர்.

பஞ்சாப் மாநிலம், ஹோஷியார்பூர் மாவட்டம் ஹாஜிபூர் சாலையில் சென்று கொண்டிருந்த தனியார் பஸ், டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தலைகீழாக கவிழ்ந்தது. தகவல் அறிந்து, சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் உள்ளூர் மக்களின் உதவியுடன் நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொண்டனர். இந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும் 30 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது. விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. முதற்கட்ட விசாரணையில் பஸ்ஸை அதிவேகமாக இயக்கியதால், டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது என்பது தெரியவந்துள்ளது. பஸ் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் எட்டு பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.




சென்னை தலைமை செயலகத்தில் திட்டம் மற்றும் வளர்ச்சி துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தலைமை செயலாளர் முருகானந்தம் உள்ளனர்.

### இரட்டைமலை சீனிவாசன் ஏற்றிய

# உரிமைச்சுடரை அரசு என்றும் பாதுகாக்கும்: முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஜூலை 08-**

"திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் ஏற்றிய உரிமைச் சுடரை இந்த திராவிட மாடல் அரசு என்றும் அணையாமல் பாதுகாக்கும்." என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "கல்வியை மட்டும் பெற்றுவிட்டால், அதைக் கொண்டு எந்த அளவுக்குச் சமூக இழிவுகளைக் களைந்து புரட்சி செய்யலாம். நம் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்பதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டு திராவிடமணி இரட்டைமலை சீனிவாசனார். அவரது பிறந்தநாளில், ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர் ஆற்றிய ஒப்பற்ற பணிகளைப் போற்றி நினைவுகூர்கிறேன். அவர் பிறந்த செங்கல்பட்டு மாவட்டத்தில், கடந்த ஆண்டு திருவுருவச் சிலையுடன் கூடிய நினைவு மண்டபத்தினைத் திறந்து வைத்தது, இரட்டைமலையாரைக் கொண்டாடிய நமது திராவிட மாடல் அரசு என்றும் அவர் ஏற்றிய உரிமைச் சுடரை அணையாமல் பாதுகாக்கும்." என்று தெரிவித்துள்ளார்.

### பீகாரில் சூடுபிடிக்கும் தேர்தல் களம்:

# போராட்டங்களில் பங்கேற்கிறார் ராகுல்

**பாட்னா, ஜூலை 08-**

காங்கிரஸ் எம்.பி.யும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி ஜூலை 9ல் பாட்னா செல்லவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

பீகாரில் இந்தாண்டு அக்டோபர்- நவம்பரில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியத் தேர்தல் ஆணையம் இதற்கான தேதியை இன்னும் அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில், பல்வேறு கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் பீகாரில் தொடர்ச்சியாகப் படையெடுத்து வருகின்றனர். அதன்படி, ஜூலை 9ல் ராகுல் காந்தி பாட்னா செல்லவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் காந்தி, தலைநகரில் நடைபெறும் புதிய தொழிலாளர் சட்டம் மற்றும் வாக்காளர் திருத்தத்திற்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொள்ள உள்ளார். இந்த தகவலைச் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ், காங்கிரஸ் தலைவர் ராஜேஷ் குமார், பீகார் மாநில காங்கிரஸ் பொறுப்பாளர் கிருஷ்ணா அல்லவாரு மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்ட செய்தியாளர் சந்திப்பின்போது அறிவித்தனர்.

ஒரு மாதத்திற்குள் நிறைவடையும், வாக்காளர் திருத்தப் பட்டியல், இதுவரை குழப்பத்தில் உள்ளதாகவும், இந்த ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தேர்தல் ஆணையம் உதவ முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

### பிரத்யேக பேருந்தில்

# எடப்பாடி பழனிசாமி ‘ரோடு ஷோ’




**கோவை, ஜூலை 08-**

பிரச்சார பயணத்திற்கான பிரத்யேக பேருந்தில் எடப்பாடி பழனிசாமி ரோடு- ஷோ தொடங்கினார்.

தமிழக சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள அ.தி.மு.க. முழு வீச்சில் தயாராகி வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழகம் முழுவதும் மக்கள் சந்திப்பு சுற்றுப் பயணத்தை அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மேற்கொள்ள இருக்கிறார். சட்டசபை தொகுதி வாரியாக ''மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்'' என்ற பெயரில் எடப்பாடி பழனிசாமி மேற்கொள்ளும் சுற்றுப் பயணத்தில் பங்கேற்க கூட்டணி கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மக்கள் சந்திப்பு சுற்றுப் பயணத்தை எடப்பாடி பழனிசாமி நேற்று கோவை மாவட்டத்தில் தொடங்கினார். அதன்படி, மேட்டுப்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட தேக்கம்பட்டி வன பத்திரகாளி அம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு நடத்திய நிலையில், தனது சுற்றுப்பயணத்தை எடப்பாடி பழனிசாமி தொடங்கினார். வேளாண் மக்களின் உறுதுணையோடு தமிழகத்தில் மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும் என எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

இந்நிலையில், நேற்று மாலை பிரச்சார பயணத்திற்கு பிரத்யேக பேருந்தில் இ.பி.எஸ். புறப்பட்டார். இதில், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனும் பங்கேற்றுள்ளார்.

### இல்லாத இடத்திற்கு விளம்பரம்:

# சிக்கலில் தெலுங்கு நடிகர் மகேஷ்பாபு

**ரங்காரெட்டி, ஜூலை 08-**

தெலுங்கு நடிகர் மகேஷ்பாபு ரியல் எஸ்டேட் விளம்பரத்தில் நடித்து, நில மோசடி வழக்கில் சிக்கியிருப்பது பேசுபொருளாகி உள்ளது.

ரியல் எஸ்டேட் விளம்பரத்தில் நடித்த தெலுங்கு நடிகர் மகேஷ்பாபு, அதில் இல்லாத ஒரு இடத்தின் பெயரையும் குறிப்பிட்டு நடித்துள்ளார். இதனை நம்பி முதலீடு செய்த ஒருவர், தான் நஷ்டம் அடைந்ததாக தெலுங்கானாவின் ரங்காரெட்டி மாவட்ட நுகர்வோர் ஆணையத்தில் புகார் அளித்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் அமலாக்கத்துறை சார்பில் நடிகர் மகேஷ்பாபுவுக்கு சாய் சூர்யா டெவலப்பர்ஸ் மற்றும் சுரானா குழுமம் சம்பந்தப்பட்ட பண மோசடி விவகாரம் தொடர்பாக நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. சாய் சூர்யா டெவலப்பர்ஸ் மற்றும் சுரானா குழுமத்தின் பிராண்ட் அம்பாஸ்டராக அவர் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மகேஷ் பாபு பணம் மற்றும் செக் மூலமாக ரூ.5.9 கோடிகள் பெற்றதாக கூறப்படுகிறது. இதில் பணம் மட்டுமல்லாமல், சட்ட விரோதமாக வேறு ஏதேனும் பொருள் அல்லது அசையும், அசையா சொத்தும் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பி விசாரித்து வருகிறது. மேலும், சாய் சூர்யா டெவலப்பர்ஸ் மற்றும் சுரானா குழுமத்தின் ரியல் எஸ்டேட் விளம்பரத்தில் நடித்த மகேஷ்பாபு, அதில் அவர் பயன்படுத்திய பெயர்களில் இல்லாத ஒரு இடத்தின் பெயரையும் சொல்லியுள்ளார். அதுதான் தற்போதைய பிரச்னைக்கு காரணம். மருத்துவர் ஒருவர் அளித்த புகாரில், நடிகரை நம்பி முதலீடு செய்ததில் ரூ.34.8 லட்சம் நஷ்டம் ஏற்பட்டது என குறிப்பிட்டு ரங்காரெட்டி மாவட்ட நுகர்வோர் ஆணையத்தில் புகாரளித்துள்ளார். அதன் பேரில், மகேஷ்பாபுவுக்கு நுகர்வோர் ஆணையம், விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. விரைவில் விசாரணைக்கு ஆஜராகலாம் என்கின்றனர்.

# ஸ்ரீகாந்த், கிருஷ்ணா ஜாமீன் மனு: உயர் நீதிமன்றம் இன்று உத்தரவு

**சென்னை, ஜூலை 08-**

போதைப் பொருள் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணாவின் ஜாமீன் மனுக்கள் மீது இன்று (ஜூலை 8) உத்தரவு பிறப்பிக்கப்படும் என சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

போதைப் பொருள் வழக்கில், கடந்த மாதம் கைது செய்யப்பட்ட நடிகர்கள் ஸ்ரீகாந்த் மற்றும் கிருஷ்ணா ஆகியோர் ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள், நீதிபதி நிர்மல்குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஸ்ரீகாந்த் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஜான் சத்தியன், ஸ்ரீகாந்த் போதைப் பொருள் பயன்படுத்தியதாக கைது செய்யப்பட்டுள்ளார். அவர், வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முதல் எதிரி பிரதீப்குமார் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து போதைப்பொருள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.'' என வாதிட்டார்.



நடிகர் கிருஷ்ணா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் இன்பண்ட் தினேஷ், "போலீஸார் அனுப்பிய சம்மனை ஏற்று விசாரணைக்கு ஆஜரான நிலையில் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுக்கான காரணங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. அவரிடம் நடத்திய மருத்துவப் பரிசோதனையில், போதைப் பொருள் பயன்படுத்தியது நிரூபிக்கப்படவில்லை.'' என வாதிட்டார். இதற்கு பதிலளித்த அரசுத்தரப்பு வழக்கறிஞர், "கொலை முயற்சி வழக்கில் கைது செய்யப்பட்ட அ.தி.மு.க. முன்னாள் நிர்வாகியான பிரசாத்திடம் நடத்திய விசாரணையில் போதைப் பொருள் புழக்கம் குறித்து தெரிய வந்ததாகவும், அவரது ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், முதல் எதிரி பிரவீன் குமாரும், அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் நடிகர் ஸ்ரீகாந்த் ஜூன் 23-ம் தேதியும், கிருஷ்ணா ஜூன் 26-ம் தேதி கைது செய்யப்பட்டனர்.'' என்றார்.

அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, ஸ்ரீகாந்த் மற்றும் கிருஷ்ணாவின் ஜாமீன் மனுக்கள் மீது இன்று உத்தரவு பிறப்பிக்கப்படும் என நீதிபதி நிர்மல்குமார் அறிவித்தார்

### தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார்:

# விவசாயிகள், மக்களுடன் எப்போதும் அ.தி.மு.க. இருக்கும்: இ.பி.எஸ். பேச்சு

**கோவை, ஜூலை 08-**

"அ.தி.மு.க. அரசாங்கம் எப்போதும் விவசாயிகள் உடன்; மக்கள் உடன் இருக்கும் என கோவையில் நடந்த விவசாயிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி பேசினார்.

'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற தலைப்பில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தனது முதலாவது பிரச்சாரப் பயணத்தை கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நேற்று (ஜூலை 7) தொடங்கினார். இதையொட்டி நேற்று காலை தேக்கம்பட்டியில் உள்ள வனபத்ரகாளியம்மன் கோயிலில் பழனிசாமி தரிசனம் செய்தார்.

அதைத் தொடர்ந்து தேக்கம்பட்டியில் உள்ள திருமண மண்டபத்தில் விவசாய அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகளுடன் கலந்துரையாடல் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது: சொட்டுநீர் பாசன திட்டத்தை கொண்டு வந்தது அ.தி.மு.க. தான். கால்நடை மருத்துவக் கல்லூரிகள் கொண்டு வரப்பட்டதும் அ.தி.மு.க. ஆட்சியில் தான். ஆனால், அப்போது ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் எல்லாம் கிடப்பில் போடப்பட்டது.

எங்கள் ஆட்சியில், மும்முனை மின்சாரம் இலவசமாக வழங்கினோம். வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக கொடுத்ததோம். வனவிலங்குகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் பாதிப்புகளை உடனடியாக மதிப்பீடு செய்து அதன் இழப்பீட்டை வழங்கியது நான் முதல்வராக இருந்தபோதுதான்.

தி.மு.க. ஆட்சியில் நான்கு முறை மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அண்டை மாநிலமான கேரள மாநிலத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி நீர் பிரச்சினையை தீர்க்க வழி வகுத்தோம். தற்போது ஆட்சி மாற்றம் ஆன பிறகு அந்தப் பிரச்சினை குறித்து இந்த அரசு பேசவோ, அல்லது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவோ இல்லை.

அ.தி.மு.க. அரசாங்கம் என்பது மக்களுக்கான அரசாங்கம், விவசாயிகளுக்கான அரசாங்கம். எப்போதும் நாங்கள் விவசாயிகளுடன்; மக்களுடன் இருப்போம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

### ரயில் நிலையத்தில் பிரசவம்:

# ராணுவ மருத்துவருக்கு தலைமை தளபதி பாராட்டு

**புதுடில்லி, ஜூலை 08-**

உத்தரபிரதேசத்தில் ரயில் நிலையத்தில் பிரசவ வலியால் துடித்துக் கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணுக்கு, குழந்தையை பிரசவிக்க உதவிய ராணுவ மருத்துவருக்கு ராணுவ தளபதி உபேந்திரா திவேதி பாராட்டு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (ஜூலை 6) பன்வெல்-கோரக்பூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணித்த ஒரு கர்ப்பிணிப் பெண்ணிற்கு கடுமையான பிரசவ வலியை எதிர்கொண்ட நிலையில், அவரை உறவினர்கள் ஜான்சி ரயில் நிலையத்தில் இறக்கினர்.

சூழ்நிலையை அறிந்த ஒரு பெண் டிக்கெட் பரிசோதகரும் ஒரு ராணுவ அதிகாரியும் விரைந்து வந்து அந்த கர்ப்பிணி பெண்ணிற்கு உதவினர்.



இந்த நிலையில் ரயிலுக்காக அங்கு காத்திருந்த ராணுவத்தின் மருத்துவ பிரிவை சேர்ந்த மேஜர் டாக்டர் ரோஹித் பச்வாலா 31, உடனே அந்த பெண்ணிற்கு ரயில்வே பிளாட்பாரத்தில் குழந்தை பிரசவிக்க உதவினார். மருத்து உபகரணங்கள் ஏதும் இல்லாத நிலையில், ஹேர் க்ளிப் மற்றும் பாக்கெட் கத்தியை பயன்படுத்தி அந்தப் பெண்ணின் பிரசவத்தை நல்லபடியாக செய்து முடித்தார். ராணுவ மருத்துவர் ரோஹித் பச்வாலாவின் இந்த செயலுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

இந்த நிலையில், ரயில்நிலையத்தில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு, குழந்தையை பிரசவிக்க உதவிய ராணுவ மருத்துவர் ரோஹித் பச்வாலாவுக்கு ராணுவ தளபதி உபேந்திரா திவேதி பாராட்டு தெரிவித்துள்ளார். கடமைக்கு அப்பாற்பட்டு ரோஹித் பச்வாலா அர்ப்பணிப்புடன் இந்த செயலை செய்ததாகவும், ராணுவ சேவையின் உன்னதமான மதிப்புகளை இது வெளிப்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மடப்புரம் கோவில் காவலாளி மரணம்: த.வெ.க. போராட்டத்திற்கு அனுமதி

**சென்னை, ஜூலை 08-**

திருப்புவனம் அஜித்குமார் கொலை வழக்கு தொடர்பாக தவெக போராட்டத்திற்கு போலீசார் அனுமதி அளித்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் போலீசார் தாக்கியதில் மரணம் அடைந்தார். தமிழகத்தையே உலுக்கிய இந்த கொடூர சம்பவத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. அஜித்குமார் மரணத்திற்கு நீதி கேட்டும், ஐகோர்ட்டின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்து நீதி விசாரணை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியும் த.வெ.க. சார்பில் சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே கடந்த ஜூலை 3-ந்தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் போராட்டம் நடத்துவதற்கு போலீசார் அனுமதி கிடைக்காததால், ஜூலை 6-ந்தேதி போராட்டத்தை நடத்த அனுமதி கோரி த.வெ.க. சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டது. இந்தநிலையில் அஜித்குமார் மரணம் தொடர்பான த.வெ.க. போராட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவையடுத்து போராட்டத்திற்கு போலீசார் அனுமதி வழங்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# உலகின் கவனத்தை கவர்ந்த இந்திய பாதுகாப்புத்துறை

### மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் பெருமிதம்

**புதுடில்லி, ஜூலை 08-**

ஆபரேஷன் சிந்தூரின் மூலம் இந்திய ராணுவத்தின் வீரமும், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராணுவ ஆயுதங்களின் வலிமையும் நிருபிக்கப்பட்டுள்ளதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநரகம் சார்பில் 3 நாள் நடக்கும் மாநாடு நேற்று தொடங்கியது.

இதனை தொடங்கி வைத்த மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்திய ராணுவம் மற்றும் உள்நாட்டு ராணுவ உபகரணங்கள் தயாரிப்பு குறித்து பேசினார்.

அவர் பேசியதாவது; இன்று உலகமே நமது பாதுகாப்புத்துறையை திரும்பிப் பார்க்கின்றன. ஆபரேஷன் சிந்தூரின் மூலம் நமது ராணுவ வீரர்களின் வீரம் வெளிப்பட்டது. அதேபோல, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராணுவ ஆயுதங்களின் வலிமையும் நிருபிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், நமது ராணுவ தயாரிப்புகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. கடந்த 2024ம் ஆண்டு சர்வதேச ராணுவ செலவு 2.7 டிரில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இதன்மூலம், மிகப் பெரிய வர்த்தகம் நமக்காக உருவாக இருக்கிறது.

இந்தியாவின் பாதுகாப்பு பட்ஜெட் உலகின் பல நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட அதிகம். மக்களின் வருமானத்தில் ஒரு பெரும் பங்கு பாதுகாப்பு அமைச்சகத்திற்கு ஒதுக்கப்படுவதால், நமது பொறுப்பு மிகவும் அதிகரித்துள்ளது. எனவே, பட்ஜெட்டை சரியான முறையில் பயன்படுத்துவது அவசியம், இவ்வாறு அவர் கூறினார்.

# அச்சு ஊடகங்களே அதிகபட்ச நம்பகத்தன்மை கொண்டவை

### அஷ்வினி வைஷ்ணவ் பாராட்டு

**புதுடில்லி, ஜூலை 08-**

''இன்றைய ஊடகங்களில், அச்சு ஊடகங்களே அதிகபட்ச நம்பகத்தன்மை கொண்டவையாக இருக்கின்றன,'' என மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில நாளிதழுக்கு அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பேட்டி: பயங்கரவாதத்திற்கு எதிராக, அதிக கவனம் செலுத்தி ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் வெற்றிகரமாக தாக்குதல் நடத்தியதால், இந்தியா தார்மீக ரீதியாக உயர்ந்த நிலையைப் பெற்றது. உலகம் இந்தியாவை மிகவும் பொறுப்பான நாடாகவும், பொருளாதார ரீதியாக உயர்ந்து வரும் நாடாகவும் பார்க்கிறது.

சமூக வலைதளங்களின் தாக்கம், சமுதாயத்தில் நேர்மறையானதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டியுள்ளது; அவற்றின் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்கவும் வேண்டியுள்ளது. உண்மையில், அச்சு ஊடகங்கள் தான் இப்போது அதிகபட்சமான நம்பகத்தன்மை கொண்டதாக இருக்கின்றன.

அரசியல் சட்டத்தின்படி நிர்வாகம் செய்யப்படும் இந்த நாட்டில் செயல்படும் நிறுவனங்கள் அனைத்தும், குறிப்பாக ஒவ்வொரு சமூக வலைதள நிறுவனங்கள், நாட்டின் சட்டதிட்டங்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும். இவ்வாறு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்கின்றன. இந்த கூட்டணி கட்டுக்கோப்பான கூட்டணி. அதில் உறுதியாக இருக்கிறோம். தி.மு.க. கூட்டணியில் இருந்தே தேர்தலை சந்திப்போம். அ.தி.மு.க.வுடன் விஜய் கட்சி சேர்ந்தால் கூட்டணி பலமாக இருக்கும் என்ற வியூக கேள்விகளுக்கு நான் பதிலளிக்க விரும்பவில்லை. **- திருமாவளவன்**



14 அரசு மருத்துவ கல்லூரி முதல்வர்களின் நியமனம் ரத்து செய்யப்பட்டது சரியானது என மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், தமிழக அரசு உடனடியாக காலியாக உள்ள 14 அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர்கள் காலி இடங்களை முறையாகவும், நியாயமாகவும் நிரப்ப வேண்டும். **- ராமதாஸ்**



ஆந்திரா, கர்நாடக மாநிலங்களை பின்பற்றி தமிழகத்தில் பெரும் நஷ்டத்தை சந்தித்திருக்கும் தமிழகத்தைச் சேர்ந்த மா விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை உடனடியாக அறிவிப்பதோடு, நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை போல மாம்பழங்களுக்கும் குறைந்த பட்ச ஆதாரவிலையை தமிழக அரசு நிர்ணயிக்க வேண்டும். **- டி.டி.வி.தினகரன்**



இந்தியாவில் கர்நாடகம், பீகார், தெலுங்கானம், ஆந்திரம் உள்ளிட்ட மாநிலங்களில் மாநில அரசுகளால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு விட்ட நிலையில், இன்று வரை தமிழ்நாட்டில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று கூறி தமிழக அரசு தட்டிக்கழித்து வருகிறது. **- அன்புமணி**



காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட வைகுண்ட பெருமாள் கோவில் சன்னதி தெருவில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமிற்கு வீடு வீடாகச் சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையட்டினை வழங்கும் பணியை மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.





அறுபடை வீடுகளில் இரண்டாம் படைவீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு விழா நேற்று கோலாகலமாக நடைபெற்றது. இதில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்பட லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

# திருவொற்றியூரில் பெண்களுக்கான புற்றுநோய் பரிசோதனை முகாம்

**திருவொற்றியூர் ஜூலை. 8 ,**

திமுக தலைமைக்கழக வழக்கறிஞரும் திருவொற்றியூர் மண்டல மாமன்ற உறுப்பினருமான கவி.கணேசன் வீராசாமி ஏற்பாட்டில் பெண்களுக்கான புற்று நோய் பரிசோதனை முகாம் நடைபெற்று வருகிறது

திருவொற்றியூர் ஒடியன் மணி திரையரங்கம் எதிரில் உள்ள கவுன்சிலர் அலுவலகத்தில், அடையாறு கேன்சர் இன்ஸ்டியூட் சார்பில் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு கருப்பை வாய்ப்புற்று நோய், மார்பக புற்றுநோய் மற்றும் வாய்ப்புற்றுநோய்களை தடுத்து முன்கூட்டியே அறியும் முகாம் மற்றும் இலவச ஸ்கேன் பரிசோதனை முகாம் கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வருகிறது,இந்த முகாமில் நூற்றுக்கணக்கான பெண்கள் பரிசோதனை செய்து பயனடைந்து வருகின்றனர், இம்முகாமை மாமன்ற உறுப்பினர் கவி.கணேசன் வீராசாமி, திமுக வட்ட செயலாளர் கே.வி.சதீஷ்குமார், மாவட்ட பிரதிநிதி பி.எஸ். சைலஸ் முன்னாள் கவுன்சிலர் வேலு திருவொற்றியூர் விமல் தாஸ் , , மணலி மகேந்திரன், உள்ளிட்டோர் பார்வையிட்டனர்,தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த முகாமில் திருவொற்றியூர் நகரை சேர்ந்த தாய்மார்கள் பங்கேற்று பயனடையுமாறு கவுன்சிலர் கவி.கணேசன் வீராசாமி கேட்டுக் கொண்டுள்ளார்



சென்னை மாநகராட்சியில் 6 வார்டுகளில் நடைபெற உள்ள உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமிற்கான விண்ணப்ப படிவம் மற்றும் தகவல் கையேட்டினை வழங்கும் பணி துவக்கப்பட்டதை தொடர்ந்து, தண்டையார் பேட்டை பகுதியில் ஜெ.ஜெ.எபனேசர் எம்எல்ஏ படிவங்களை வழங்கினார். உடன் மண்டல குழு தலைவர் நேதாஜி.கணேசன் உள்ளார்.

# ஜூன் மாதத்தில் சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களின் துரித நடவடிக்கையால் ரூ.2.96.கோடி மீட்பு

**சென்னை ஜூலை 08-**

ஜூன் மாதத்தில் சென்னை பெருநகர காவல் சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களில் துரித நடவடிக்கை மேற்கொண்டு புகார்தாரர்களின் இழந்த தொகை ரூபாய்.2,96,12,994/- மீட்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர காவல், சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்கள் மூலமாக பல்வேறு சைபர் குற்ற நிகழ்வுகளில் பாதிக்கப்படும் பொதுமக்களின் புகார்களை 1930 என்ற அவசர அழைப்பு மூலமாக அல்லது நேரடியாக வழங்கப்படும் புகார்களை பெற்று துரிதமாக நவீன தொழிற்நுட்பத்துடன் கூடிய விசாரணை மூலம் பணம் இழந்தவர்களுக்கு உடனடியாக அவர்களின் பணத்தை மீட்டு தர சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில் மத்திய குற்றப்பிரிவு மற்றும் கிழக்கு, மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு மண்டலங்களின் இணை ஆணையர்கள் மேற்பார்வையில் செயல்பட்டு வரும் சைபர் குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளர்கள் மூலமாக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சைபர் புகார் சார்ந்த வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டும், இணைய வழி மூலமாக பல்வேறு சமூக வலைதள பதிவு மற்றும் தரவுகள் மூலம் பொதுமக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் சைபர் குற்றவாளிகளின் உரிய தொடர்புகளை கண்டறிந்து வங்கி கணக்குகள் முடக்கப்பட்டு, இழந்த பணத்தொகையை மீள இழந்தவர்கள் வங்கி கணக்கில் மீட்டு வழங்குவதிலும், இழந்தவர்களுடைய பணத்தை மற்றொரு வங்கி கணக்கில் அனுப்ப கோரி சிலர் ஏமாற்றப்பட்டிருப்பதும் வழக்கு சார்ந்து வங்கி கணக்குகள் முடக்கிவைக்கப்பட்டு உரிய நீதிமன்ற நடவடிக்கை மூலம் மீள பெற்று தருவதிலும் சென்னை பெருநகர காவல் துறை முன்னிலை வகிக்கிறது. சென்னை பெருநகர காவல், சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையங்களில் அதிகாரிகள் திறம்பட துரிதமாக விசாரணை மேற்கொண்டு ஜூன் மாதம் 01.06.2025 முதல் 30.06.2025 வரை சென்னை பெருநகர காவல் மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் காவல் நிலையத்தில் பெறப்பட்ட 15 புகார் மனுக்களின் மீது விசாரணை மேற்கொண்டு ரூ.2,30,02,357/- மீட்கப்பட்டும், வடக்கு மண்டல சைபர் கிரைம் காவல் நிலையத்தில் பெறப்பட்ட 16 புகார் மனுக்களில் ரூ.18,27,998/- மீட்கப்பட்டும், மேற்கு மண்டலத்தில் பெறப்பட்ட 31 புகார் மனுக்களில் ரூ.11,14,767/- மீட்கப்பட்டும், தெற்கு மண்டலத்தில் பெறப்பட்ட 62 புகார் மனுக்களில் ரூ.29,00,881/- மீட்கப்பட்டும், கிழக்கு மண்டலத்தில் பெறப்பட்ட 22 மனுக்களில் ரூ.7,66,991/-மீட்கப்பட்டும் மொத்தமாக 146 புகார்தாரர்களின் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு மொத்தம் பணம் ரூ.2,96,12,994/- ( ரூ.2 கோடியே 96 லட்சத்து 12 ஆயிரத்து 994 ரூபாய்) மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது.மேலும் 2025ம் ஆண்டு இதுவரை ரூ.15,30,22,423/- ( ரூ.15 கோடியே 30 லட்சத்து 22 ஆயிரத்து 423 ரூபாய்) மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் இணைய வழி பண பரிமாற்றம் செய்யும்பொழுது மிகுந்த விழிப்புணர்வுடனும், அனுப்பும் தொடர்புகளில் உரிய நம்பக தன்மை அறிந்து பயன்படுத்திடவும், உரிய புகார்களுக்கு 1930 எண்ணை தொடர்பு கொள்ளவும், www.cybercrime.gov.in என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும் சென்னை பெருநகர காவல் துறை மூலம் கேட்டு கொள்ளப்படுகிறது.

# வாகன ஓட்டிகளிடம் அநாகரிகம்: ஆய்வாளர் மீது நடவடிக்கை

**சென்னை ஜூலை 08-**

சென்னையில் வாகன ஓட்டிகளிடம் அநாகரிகமாக நடந்து கொண்ட புகாரில் போக்குவரத்து எஸ்.ஐ. மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோடம்பாக்கம் போக்குவரத்து காவல் பெண் உதவி ஆய்வாளர் கலைவாணி ஆயுதப்படைக்கு மாற்றம் செய்யப்பட்டார். கலைவாணிக்கு உடந்தையாக இருந்த போக்குவரத்து காவல் ஆய்வாளர் ஐயப்பனும் ஆயுதப்படைக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

# புளியந்தோப்பில் மழை நீர் வடிகால்வாயில் மண் சரிவு

**சென்னை ஜூலை 08-**

சென்னை புளியந்தோப்பு 77வது வார்டுக்கு உட்பட்ட டிம்லர்ஸ் சாலையில் மழைநீர் வடிகால்வாய்க்காக பெரிய பள்ளம் தோண்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. நேற்று முன் தினம் இரவு பள்ளம் தோண்டப்பட்ட இடத்தில் அருகே மண் சரிந்து அங்கு கட்டப்பட்டிருந்த கட்டைகள் அனைத்தும் உடைந்துவிழுந்தது. இதனால் மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதுகுறித்து தகவல் கிடைத்ததும் புளியந்தோப்பு போக்குவரத்து காவலர் கண்ணன் தலைமையில் போலீசார் வந்து ஆய்வு செய்தனர். பின்னர் போலீஸ்காரர்கள் இறங்கி பள்ளத்தில் விழுந்த தடுப்புகளை எடுத்து தள்ளி வைத்துவிட்டு வாகனங்கள் செல்வதற்கு எதுவாக ஏற்பாடு செய்தனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறியதாவது; மழைநீர் வடிகால்வாய் பணி நடைபெறும் இடத்தில் தடுப்புகளை வைத்து மாநகராட்சி ஊழியர்கள் பணி செய்யவில்லை. தற்போது மண்சரிவால் ஏற்பட்ட பள்ளத்தில் தடுப்புகள் அனைத்தும் பள்ளத்தில் விழுந்துவிட்டது. அந்த சமயத்தில் வாகனங்கள் வந்திருந்தால் பெரிய விபத்து ஏற்பட்டிருக்கும். போக்குவரத்து போலீசார் வந்து உடனடியாக சரிசெய்ததால் விபத்து தவிர்க்கப்பட்டது. இவ்வாறு கூறினர்.

# ரூ.1,49,000 மதிப்புள்ள போலி எலெக்ட்ரிக்கல் பாலிகேப் ஓயர்கள் மற்றும் கிர்லோஸ்கர் வோல்டேஜ் ரெகுலேட்டர்கள் பறிமுதல்

**சென்னை ஜூலை 08-**

ரூ.1,49,000/- மதிப்புள்ள போலி எலெக்ட்ரிக்கல் பாலிகேப் ஒயர்கள் மற்றும் கிர்லோஸ்கர் வோல்டேஜ் ரெகுலேட்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டு நான்கு நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தையில் முன்னணி பிராண்டுகளின் பெயரில் போலி எலெக்ட்ரிக்கல் ஒயர்களை விற்பனை செய்துவருபவர்களை கண்காணித்து புகார் செய்யும் தனியார் நிறுவனமான மேலாளர் டி. மணிமாறன் என்பவர் சென்னை அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளரிடம் முன்னணி நிறுவனமான பாலிகேப்பிராண்டை போல போலியான எலெக்ட்ரிகல் ஒயர்களை விற்பனை செய்துவருவது குறித்து புகார் அளித்ததின் பேரில் சென்னை அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவினர் சௌகார்பேட்டை பகுதியில் சோதனை நடத்தியதில் ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த 1) புல்சிங் 2) பகவத்சிங் மற்றும் 3) ஃபரூக்கான் ஆகிய மூன்று பேரை போலியான பாலிகேப் ஒயர்களை டெல்லியிலிருந்து வாங்கிவந்து விற்பனை செய்வருவது கண்டறியப்பட்டது. எனவே மேற்படி நபர்களை கைது செய்து அவர்களிடமிருந்து ரூ.96,500/- மதிப்புள்ள போலி எலெக்ட்ரிக்கல் ஒயர்கள் பறிமுதல் செய்யப்பட்டு வழக்குபதிவு செய்து விசாரிக்கப்பட்டுவருகிறது.

மேலும் இதுபோன்று மற்றொரு வழக்கில் முன்னணி நிறுவனமான கிர்லோஸ்கர் பிராண்டின் போலியான வோல்டேஜ் ரெகுலேட்டர்களை விற்பனை செய்துவருவது குறித்து எஸ்.மணி அரவிந்த் இஐபிஆர் இந்தியா பிரைவேட் லிமிடெட்,புலனாய்வு அதிகாரி என்பவர் புகார் அளித்ததின் பேரில் சென்னை அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவினர் சென்னை எர்ராபலு செட்டி தெரு பகுதியில் சோதனை நடத்தியதில் ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த தீபக்குமார் என்பவர் போலியான கிர்லோஸ்கர் வோல்டேஜ் ரெகுலேட்டர்களை ஹரியானாவிலிருந்து வாங்கிவந்து விற்பனை செய்துவருவது கண்டறியப்பட்டது. எனவே மேற்படி நபரை கைது செய்து அவரிடமிருந்து ரூ.52,500/- மதிப்புள்ள போலி கிர்லோஸ்கர் வோல்டேஜ் ரெகுலேட்டர்களை பறிமுதல் செய்து வழக்கு பதிவுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுவருகிறது.

**பாராட்டு**

கூடுதல் காவல்துறை இயக்குனர்,முனைவர் அ.அமல்ராஜ், காவல்துறை தலைவர், (குற்றம்) பி.கே.செந்தில்குமாரி,மற்றும்கண்காணிப்பாளர், அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவுஇ. டி. சாம்சன், ஆகிய உயர் அதிகாரிகள் சென்னை அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவினரின் விரைவான நடவடிக்கைக்கு பாராட்டு தெரிவித்தனர்.மேலும் போலி பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை குறித்த தகவல்களை spiprec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ அல்லது 044-28511587 என்ற தொலைபேசி எண்ணிலோ தெரிவிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டனர்.

# இடத்தை காலி செய்ய கூறி, துப்பாக்கியை காட்டி மிரட்டிய ஆந்திராவைச் சேர்ந்த நபர் கைது

**சென்னை ஜூலை 08-**

சென்னை, கிண்டி, கன்னிகாபுரம் பகுதியில் வசித்து வரும் சக்கரேஸ்வரன், என்பவர் அதே பகுதியில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் தூய்மை பணியாளராக வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 04.ந் தேதி அன்று காலை, மேற்படி நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது, மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் சண்முகர் என்பவர் செல்போனில் தொடர்பு கொண்டு, நிறுவனத்திற்குள் உள்ளே தகராறு நடந்து வருவதாகவும், அதை உள்ளே சென்று பார்க்குமாறும் கூறியதின்பேரில், சக்கரேஸ்வரன் நிறுவனத்தின் உள்ளே சென்று பார்த்த போது, அங்கு மதுசூதனன்ரெட்டி மற்றும் ராமையா ஆகிய இருவரும் சேர்ந்து மகேந்திரன் என்பவரிடம் தகராறு செய்துள்ளனர்.

**மிரட்டல்**

சக்கரேஸ்வரன், மதுசூதனன்ரெட்டி மற்றும் ராமையா ஆகிய இருவரிடமும் ஏன் தகராறு செய்கிறீர்கள், நிறுவனத்தின் உரிமையாளர் சண்முகர் வந்த பிறகு பேசிக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

அப்போது மதுசூதனன்ரெட்டி என்பவர் சக்கரேஸ்வரரை தகாத வார்த்தைகள் பேசி, துப்பாக்கியை காட்டி, இந்த இடத்தை விட்டு அனைவரும் காலி செய்துவிட்டு செல்ல வேண்டும் என்றும் இல்லையென்றால், துப்பாக்கியால் சுட்டு கொலை செய்து விடுவதாக கூறி மிரட்டிவிட்டு, அங்கிருந்து காரில் இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

இது குறித்து சக்கரேஸ்வரன், கிண்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், கொலைமுயற்சி மற்றும் ஆயுத சட்டம் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். கிண்டி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி மதுசூதனன் ரெட்டி, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 துப்பாக்கி, 6 தோட்டாக்கள், துப்பாக்கி உரிமை ஆவணம் மற்றும் 1 கார் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் மேற்படி நிறுவனம் வாடகைக்கு செயல்பட்டு வருவதும், அந்த இடத்தின் உரிமையாளரின் உறவினரான எதிரி மதுசூதனன்ரெட்டி என்பவர் மேற்படி இடத்திற்கு சென்று, நிறுவனத்தை காலி செய்யுமாறு தகராறு செய்து, சக்கரேஸ்வரனை துப்பாக்கியை காட்டி மிரட்டியது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி மதுசூதனன்ரெட்டி, விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, அடைக்கப்பட்டார்.

# காதலிப்பதாக ஏமாற்றி பணம் பறித்த வாலிபரால் ஐடி பெண் ஊழியர் தூக்கிட்டு தற்கொலை

**சென்னை ஜூலை 08-**

காதலிப்பதாக வாலிபர் ஏமாற்றி பணம் பறித்துவந்ததால் விரக்தியடைந்த ஐடி பெண் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். அவர் தனது பிறந்தநாளில் இந்த முடிவை எடுத்துள்ளதால் இறந்தநாளாக மாறிவிட்டது. சென்னை நெற்குன்றம் பகுதியை சேர்ந்தவர் ராஜேஸ்வரி. இவரது கணவர் ஆறுமுகம் 2 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இவர்களது மகன் தினேஷ்(27) சினிமாவில் உதவியாளராக பணியாற்றுகிறார். இவர்களது மகள் தீபிகா(23). இவர் அம்பத்தூர் பகுதியில் உள்ள ஐடி கம்பெனியில் வேலை செய்துவந்தார்.

வீட்டின் கீழ்தளத்தில் வசித்துவந்த தீபிகா நேற்று முன் தினம் நீண்டநேரமாக வெளியே வராததால் தாய் சென்று அறை கதவை தட்டியுள்ளார். ஆனால் கதவை திறக்காததால் ஜன்னல் வழியாக பார்த்தபோது படுக்கை அறையில் தீபிகா தூக்கிட்டு கிடப்பது பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

இதனால் அக்கம்பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து சென்று தீபிகாவை மீட்டு உடனடியாக கீழ்பாக்கம் அரசுமருத்துவமனைக்கு கொண்டு சென்றனர் அவரது உடலை பரிசோதனை செய்த டாக்டர்கள், தீபிகா ஏற்கனவே இறந்துவிட்டார் என்று தெரிவித்தனர். இதனால் தாய் கதறி அழுதார். இதுபற்றி தகவல் கிடைத்ததும் கோயம்பேடு போலீசார் அரசுமருத்துவமனைக்கு சென்று உடலை பிரேத பரிசோதனை செய்தனர். இதுசம்பந்தமாக தீபிகாவின் தாயிடம் போலீசார் விசாரித்தனர். அப்போது அவர் கூறியதாவது; எனது மகள் சாவுக்கு என் வீட்டிற்கு குடியிருந்த அருள் என்பவர் தான் காரணம். அவர்தான் எனது மகளை காதலிப்பதாக கூறி ஏமாற்றினார். கடந்தாண்டு பணம், நகையை ஏமாற்றியதுடன் எனது மகளை சரமாரியாக அடித்துள்ளார். இது குறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்தபோது அருளை அழைத்து எச்சரித்தனர். இதன் பிறகும் எனது மகளை காதலிப்பதாக கூறிவந்தார். எனது மகள் சாவுக்கு காரணமான அருள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தாண்டு எனது மகளின் பிறந்தநாளுக்கு என்ன செய்யலாம் என்று யோசித்து வந்தேன். தற்போது அந்த கனவு சரிந்துவிட்டது. நேற்று எனது மகளின் பிறந்த நாள் இறந்தநாளாக மாறிவிட்டது. இவ்வாறு அவர் கூறினார். இதன் அடிப்படையில், விசாரணை நடத்துவதற்காக அருள் வீட்டுக்கு போலீசார் சென்றபோது அவர் தலைமறைவாகிவிட்டார் என்பது தெரிந்தது. இதையடுத்து அவரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# திருமங்கலம் பகுதியில் விடுதியில் தொடர் திருட்டு வழக்கில் வாலிபர் கைது

**சென்னை ஜூலை 08-**

திருநெல்வேலி மாவட்டத்தைச்சேர்ந்த ஆரோக்கியரோசன், என்பவர் பி.இ. படித்து முடித்து சென்னை, பழைய திருமங்கலம், காந்தி தெருவில் உள்ள ஆண்கள் விடுதியில் தங்கியிருந்து அதே பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் கம்ப்யூட்டர் கோர்ஸ் படித்து வருகிறார். இவர் கடந்த 28.ந் தேதி அன்று அவரது லேப்டாப்பை அறையில் வைத்து விட்டு மறுநாள் எழுந்து பார்த்த போது, அறையிலிருந்து அவரது லேப்டாப் திருடு போனது தெரியவந்தது. இது குறித்து ஆரோக்கியரோசன் திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட கிரிபிரசாத், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் லேப்டாப் மீட்கப்பட்டது.விசாரணையில் கைது செய்யப்பட்ட கிரிபிரசாத் பி.இ. படித்து முடித்துவிட்டு மேற்படி விடுதியில் தங்கியிருந்து ஆன்லைன் டிரேடிங் தொழில் செய்து வந்துள்ளார். Trading தொழிலில் நஷ்டம் ஏற்பட்டதால் கிரிபிரசாத் விடுதியில் தங்கியிருந்த நபர்களின் செல்போன்கள் மற்றும் லேப்டாப்பை திருடி விற்பனை செய்து, கிடைத்த பணத்தை செலவு செய்துள்ளது தெரியவந்தது. மேலும் கிரிபிரசாத் மீது ஏற்கனவே ஒரு குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி கிரிபிரசாத் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# ஆர்.கே நகர் பகுதியில் 3 பேர் மீது தாக்குதல்: 4 பேர் கைது

**சென்னை ஜூலை 08-**

சென்னை, கொருக்குப்பேட்டை, ஜீவா நகர் பகுதியில் வசித்து வரும் அஜித்குமார், என்பவர் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்.

இவர் கடந்த 05.ந் தேதி அன்று இரவு, அவரது நண்பர் இம்ரான் என்பவருடன் மேற்படி வீடு அருகே உள்ள மளிகை கடையில் பேசிக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த 4 பேருடன் , இம்ரானுடன் ஏற்கனவே ஏற்பட்ட தகராறு காரணமாக, இம்ரானை தகாத வார்த்தைகள் பேசி, கையால் தாக்கியுள்ளனர். அதை தடுக்க சென்ற அஜித்குமாரையும், கையால் தாக்கி, கத்தியால் தாக்க முற்பட்ட போது, அஜித்குமார், மளிகை கடைக்குள் உள்ளே சென்று ஒளிந்துள்ளார். அப்போது மேற்படி 4 நபர்களில் ஒருவர் மளிகை கடை உரிமையாளரின் தாயார் மல்லிகா மீது செங்கல்லைக் கொண்டு தாக்கிவிட்டு, பின்னர் 4 பேரும் சேர்ந்து கொலைமிரட்டல் விடுத்து, அங்கிருந்து தப்பிச் சென்றனர். தாக்குதலில் இரத்த காயமடைந்த மல்லிகா, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இச்சம்பவம் குறித்து, அஜித்குமார், ஆர்.கே நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், வழக்குப்பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர். ஆர்.கே நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.தருண் (எ) மாறா, 2.சுந்தர் (எ) சூர்யா, 3.முகமது செரிப், 4.கோகுல்ராஜ், ஆகிய 4 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி தருண் (எ) மாறா மீது ஏற்கனவே 5 குற்ற வழக்குகளும், எதிரி சுந்தர் (எ) சூர்யா மீது 1 குற்ற வழக்கும், எதிரி முகமதுசெரிப் மீது 5 குற்ற வழக்குகளும், எதிரி கோகுல்ராஜ் மீது 1 குற்ற வழக்கு உள்ளதும் தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் 4 நபர்களும் விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# மெரினா பகுதியில் மாவா பாக்கெட்டுகளை விற்ற பெண் கைது

**சென்னை ஜூலை 08-**

மெரினா காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் நேற்று (06.07.2025) மதியம், நீலம் பாஷா தர்கா அருகே, அங்கு சந்தேகத்திற்கிடமாக பிளாஸ்டிக் பை ஒன்றினை கையில் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்த பெண் ஒருவரை பிடித்து அவரது பையை சோதனை செய்த போது, அதில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட மாவா பாக்கெட்டுகள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில் மெரினா காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சட்டவிரோதமாக மாவா புகையிலை பொருட்களை விற்பனை செய்ய வைத்திருந்த எதிரி தேவி, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1.040 கிலோ கிராம் எடையுள்ள 52 மாவா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி தேவி மீது ஏற்கனவே 5 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி தேவி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

வாகனங்கள் ஓட்டும்
போது செல்போன்
பேசாதே...
பேசுவது எமனாக
இருக்கலாம்



ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் சிறியமலை ஆஞ்சநேயர் கோயில் குடமுழுக்கு விழா நேற்று நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆர்.காந்தி, கலெக்டர் சந்திரகலா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.




ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஒன்றிய பகுதிகளில் வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தின் கீழ் 5 மகளிர் சுயஉதவிகுழுக்களுக்கு ரூ.89.38 லட்சம் மதிப்பிலான வங்கி கடனுதவிகளை அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார். உடன் கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா, ஈஸ்வரப்பன் எம்எல்ஏ, திட்ட இயக்குனர் ஜெயசுதா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் அசோக் உள்ளனர்.

# கனந்தம்பூண்டி கிராமத்தில் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்: ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம்



திருவண்ணாமலை ஜூலை 8-

திருவண்ணாமலை மாவட்டம் காவேரிபூண்டி அடுத்த கனந்தம்பூண்டி கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் கோவில் மகாகும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நேற்று நடைபெற்றது. இதில் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

திருவண்ணாமலை அடுத்த கனதம்பூண்டி ஊராட்சியில் சக்தி வாய்ந்த அருள்மிகு மாரியம்மன் கோவில் உள்ளது இந்த மாரியம்மன் கோவில் உள்ளது இதே கோவில் வளாகத்தில் ஸ்ரீசெல்வகணபதி கெங்கையம்மன் பொன்முடியார் ஓம்சக்தி ஆகிய ஆலயங்களும் அமைந்துள்ளது. இதற்கான மகாகும்பாபிஷேகம் நடத்த ஊர் மக்கள் முடிவு செய்யப்பட்டு கடந்த சில மாதங்களாக கோவில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வந்தது.

இதனைத் தொடர்ந்து கோவில் அருகே யாகசாலைகள் அமைக்கப்பட்ட நேற்று முன்தினம் முதல் கால யாக பூஜை தொடங்கியது என்னை தொடர்ந்து இரண்டாம் கால யாக பூஜை இரவு மூன்றாம் கால யாக பூஜை நடைபெற்றது. நேற்று அதிகாலை கோபூஜை மற்றும் நான்காம் கால யாக பூஜைகள் நடைபெற்று யாகசாலையில் வைக்கப்பட்ட புனித நீருக்கு சிவாச்சாரியார்கள் வேதன மந்திரங்கள் முழங்க பூரணாகதி நடைபெற்றது பின்னர் சிவாச்சாரியார்கள் புனித நீரை ஊர்வலமாக கொண்டு வந்து ஸ்ரீ மாரியம்மன் கோவில் கோபுரத்தில் வைக்கப்பட்டுள்ள கலசத்தில் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த கும்பாபிஷேக விழாவில் காவேரி பூண்டி கனதம்பூண்டி பெரும்பாக்கம் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் ஓம் சக்தி பராசக்தி என பக்தி முழக்கமிட்டு சுவாமி தரிசனம் செய்தனர் சுவாமி தரிசனம் செய்த அனைத்து பொது மக்கள் மற்றும் பக்தர்களுக்கும் கோவில் நிர்வாகம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

மகா கு ம் பா பி ஷேக விழாவுக்கான ஏற்பாடுகளை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் எம்.எழிலன் எம்.மனோகரன் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள் கே.சரவணன் ஏ.சீனுவாசன் கே.பன்னீர்செல்வம் மற்றும் கே.மகேஷ் ஏ.கே.மணிகண்டன் எம்.தனசேகரன் விழாக்குழுவினர் ஊர்பொதுமக்கள் செய்திருந்தனர்.

# பாராஞ்சிகிராமத்தில் கஸ்த்தீஸ்வரர் சுவாமி கோயில் கும்பாபிஷேக விழா



அரக்கோணம் ஜூலை 8

ராணிப்பேட்டை மாவட்டம்.அரக்கோணம் வட்டம், பாராஞ்சி கிராமத்தில் நூற்றாண்டுகள் பழமையான பார்வத்யம்பிகா சமேத அகஸ்த்தீஸ்வரர் சுவாமி திருக்கோயில் அமைந்து உள்ளது

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா பரம்பரை ஆலய அர்ச்சகர்கள், சுவாமிநாத குருக்கள், ஜெகதீச குருக்கள்,சுந்தரமூர்த்தி குருக்கள்,குகப்பிரகாஷ் குருக்கள் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. தொண்டை மண்டல நாட்டில் வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கும் காஞ்சி மண்டலத்தில் கடிகாசலம் தணிகாசலம் என்னும் சோளிங்கர், திருத்தணி சேஷத்திரங்களுக்கு சமிபத்தில் ஸ்ரீ அகஸ்திய சிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருக்கோயில்களில் ஒன்றாக விளங்கக்கூடிய பார்வத்யம்பிகா சமேத அகஸ்தீஸ்வர சுவாமி ஆலய திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்று முடிந்தது முதல் நிகழ்ச்சியாக பாதாளத்தம்மனுக்கு சிறப்பு அபிஷேகத்துடன். விழா தூங்கியது தொடர்ந்து கணபதி பூஜை, கோ . பூஜைகளும் தினமும், தீபாராதனை. இரண்டாம் காலயாக பூஜை,மூன்றாம் கால யாக பூஜை நான்காம் கால யாக பூஜையுடன் மஹா பூர்ணஹுதி, தீபாராதனை, க்கு பின் , கலசங்கள் புறப்பட்டு.அனைத்து கோபுரங்களுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடந்ததுபின்னர் பிரசாதங்களும் .அன்னதானமும் வழங்கபட்டதுஆலயத்திற்கு சிறப்பு விருந்தினராக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் சோளிங்கர் எம் எல் ஏ.முனிரத்தினம் மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் வினோத் காந்திசோளிங்கர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்சம்பத் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர்.சிவா வந்தனர் இவர்களை சோளிங்கர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் வக்கீல் சௌந்தர் மற்றும் அரக்கோணம் ஒன்றிய குழு பெருந்தலைவர் நிர்மலா சௌந்தர் ஒன்றிய மாவட்ட கவுன்சிலர் அம்பிகா பாபு சோளிங்கர் கிழக்கு ஒன்றிய காங்கிரஸ் தலைவர் உதயகுமார் ஆகியோர் வரவேற்றனர் விழாவில் பொதுக்குழு உறுப்பினர்கள் கிருஷ்ணன் சிட்டிபாபு ரமேஷ் செயல் அலுவலர்குமுதா ஒன்றிய குழு உறுப்பினர்கள்.குமார் பிரசாத் பெருமாள் ராமன் குருக்கள் ஜெய்சங்கர் சுந்தரமூர்த்திநிர்வாகிகள் பக்தர்கள் கலந்து கொண்டனர்

# நீப்பத்துறை பெருமாள் கோயில் கும்பாபிஷேக விழா



செங்கம் ஜூலை08

செங்கம் அடுத்த நீப்பத்துறை ஸ்ரீ அலமேலு மங்கை பத்மாவதி சமேத ஸ்ரீ வெங்கட்ரமண பெருமாள் கோயில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கடந்த சனிக்கிழமை தொடங்கிய மூன்று நாள் நிகழ்ச்சியில் வாஸ்து சாந்தி விநாயகர் பூஜை கோ பூஜை கலச வேள்வி போன்ற பல்வேறு நிகழ்வுகளை தஞ்சாவூர் ஜெகநாதன் பட்டர் தலைமையிலான கோயில் அர்ச்சகர் சீனிவாசன் உள்ளிட்ட வேத விற்பன்னர்கள் வேத மந்திரம் ஓதி நிகழ்ச்சிகளை நடத்தினர் பின்னர் புனித கலச நீர் மூலவர் மற்றும் பதிவார கோபுரங்களில் தெளித்து கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. சுவாமி திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய திமுக செயலாளர் கோளாப்பாடி செந்தில் அந்தனூர் மனோகரன் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ராவந்தவாடி செந்தில் மற்றும் உபயதாரர்கள் பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். கோயில் பரம்பரை அறங்காவலர்கள் கோகுலவாணன் ஸ்ரீராம் சிவராமன் ஆகியோர் விழா ஏற்பாடுகளை செய்து நடத்தினர்.

# அரக்கோணத்தில் சந்தனகுட விழா

அரக்கோணம் ஜூலை 8

அரக்கோணம் மார்கெட் அருகில் ஜண்டா ஹளரத் சையத் ஜாபர் ஷா மஸ்தான் அவுலியா தர்கா உள்ளது. இங்கு 68-ஆம் ஆண்டு சந்தன குடம் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் எம்பி ஜெ எம் ஆரூன் வழக்கறிஞர் இம்ரான் ஆரூன்மற்றும் அதிமுக மாநில இளம் பாசறை இணை செயலாளரும்முன்னாள் நகர கூட்டுறவு வங்கி தலைவருமான ஷியாம்குமார் அரக்கோணம் நகர செயலாளர் வி.எல்.ஜோதி நகர துணை செயலாளர் கோவ. தமிழ்வாணன் 32-வது வட்ட பிரதிநிதி அந்தோணி மற் றும் நளின்குமார் வினோத் விவேக், கார்த்திக் ஆகியோருடன் மனிதநேய கட்சி நகர செயலாளர் கபீர் அகமது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஷாயிஷாரிப், கலீல் ஷாரிப், அப்துல் கபூர் இம்ரான் ஷரிப் சையத் பாவா முக மது கலாம். உள்ளிட்ட தர்கா கமிட்டி நண்பர்கள் ஈடுபட்டனர்



ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சிக்கு குடிநீர் மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் பாலாற்றில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு குடிநீர் கிணறுகள் அமைக்கும் பணி நகர மன்ற தலைவர் தேவிபென்ஸ்பாண்டியன் தலைமையில் நடந்தது. ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. கிணறு அமைக்கும் பணிக்கு பூஜைசெய்து வேலையை தொடங்கி வைத்தார்.



உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை கடலூர் மாவட்டத்தில் முதல்வர் துவக்கி வைக்கப்பட உள்ளதையொட்டி, திருப்பத்தூர் மாவட்டத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் கலெக்டர் க.சிவசவுந்திரவல்லி தலைமையில் நடந்தது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், திட்ட இயக்குனர் டாக்டர் உமாமகேஸ்வரி, தனி துணை ஆட்சியர் சதீஷ் குமார், மகளிர் திட்ட இயக்குனர் தனபதி கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் மூலம் வீடு,வீடாக சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணியை மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி காட்பாடியில் ஆய்வு செய்தார். இதில் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார் கலந்து கொண்டார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது

கன்னியாகுமரி,ஜூலை.08-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், கலெக்டர் ஆர்.அழகுமீனா தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி, கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 340 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை பி.பாபு, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, இணைபதிவளார் கூட்டுறவு சிவகாமி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் பாரதி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செந்தூர் ராஜன், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**அறிவிப்பு**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சுவால்பேட்டை நெ 10/19 டவுன் ஹால் முதல் தெரு முகவரியில் வசிக்கும் கொரா முனிரத்தினம் துணைவியார் புஷ்பாபாய் ஆகிய எனக்கு சொந்தமான அசல் கிரைய விற்பனை ஆவணம் எண் : 580 /1980 இதனை 24-06-2025ல் அரக்கோணம் பழைய பஸ் ஸ்டாண்ட் கொண்டு வந்த போ து காணவில்லை ஆன்லைன் CEK 25329257 ல் புகார் உள்ளது ஆகவே என்னிடம் தரவும்.

இப்படிக்கு
புஷ்பாபாய்

# போதை ஒழிப்பு விழிப்புணர்வு ஓவியப்போட்டி: 50 பேர் பங்கேற்பு




அரக்கோணம் ஜூலை 8

அரக்கோணம் நகரில் டாக்டர் அப்துல் கலாம் கல்வி அறக்கட்டளை அறக்கட்டளையின் சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு ஓவியப்போட்டி நடத்தபட்டது இதில் அரசு மற்றும் அரசு உதவி பெறும்பள்ளிகளைச் சேர்ந்த 50 மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர் பங்கேற்ற மாணவர்கள் அனைவரின் ஆர்வத்திளை ஊக்கபடுத்தும் விதமாக அறக்கட்டளை சார்பில் சான்றுகள் வழங்கப்பட்டன அவற்றில் வளர்புரம் அரசினர் மேல்நிலை பள்ளியில் பயிலும் 20 மாணவர்களுக்கு (பொறுப்பு) தலைமை ஆசிரியர். பிரதாப் குமார் ஆசிரியர்கள் சதீஷ்குமார் வாசுதேவன் மற்றும் ஜீவமணி ஆகியோர்முன்னிலையில் சான்றுகள் வழங்கபட்டது

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

மழைநீர்
உயிர்நீர்

# செஞ்சியில் 9 ம் சந்தனக்கூடு விழா-செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.முன்னிலையில் பிறை கொடி ஏற்றப்பட்டது



செஞ்சி ஜூலை-08,

விழுப்புரம் மாவட்டம் செஞ்சிமந்தவெளியில் உள்ள ஹசரத் சையத் யூசுப் ஷா அவுலியா தர்காவில் சந்தனக்கூடு விழா 9 ஆம் தேதி புதன் கிழமை இரவு விமர்சையாக நடைபெறுகிறது

இதை முன்னிட்டு நேற்று 6ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலையில் செஞ்சி சந்தை தோப்பில் உள்ள ஹசரத் சையத் இஸ்மாயில் ஷா அவுலியா தர்காவிலும்,செஞ்சி பேரூராட்சி அலுவலகம் அருகில் உள்ள ஹசரத் சையத் யூசூப்ஷா அவுலியா தர்காவிலும்பிறை கொடி ஏற்றப்பட்டு பாத்திஹா ஓதப்பட்டது.முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், பேரூராட்சி மன்ற உறுப்பினர் ஜான் பாஷா, ஜே.எஸ் சர்தார்உள்ளிட்ட விழா கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.சந்தனக்கூடு விழாவிற்கான ஏற்பாடுகளை ஹசரத் சையத் யூசூப்ஷா அவுலியா தர்கா கமிட்டி நிர்வாகிகள்கௌரவ தலைவர் ஜான் பாஷா, தலைவர் அசாதுல்லா, செயலாளர் சர்தார்,பொருளாளர் ஷமியுள்ளா,துணைத் தலைவர்கள் ஷாஜகான், முபாரக், துணைச் செயலாளர் ஹாஜி ஷரீப்,உள்ளிட்டோர் செய்து வருகின்றனர்.

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after I, Swetha. D, D/O, V. Deivigarajan, Aged 22 years, permanently residing at, No 11, kottaiyur Village,Thenkarumbalur Post, Thandrampet Talluk & Tiruvanmalai District 606753. Intend having my Enrollment as an advocate moved before the bar council of Tamil Nadu and Puducherry, Bar council building, High Court Campus, Chennai-600104. Those who have any valid objection may notify the same to the bar Council with in ten days.

Swetha. D

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within three months there after I, Kavin Ragav.M, S/O, Manavalan, Aged 22 years, permanently residing at,No 131, karunanithi street, Vip nagar, Natarampalli Taluk, Tirupathur district - 635852. Intend having my Enrollment as an advocate moved before the bar council of Tamil Nadu and Puducherry, Bar council building, High Court Campus, Chennai-600104. Those who have any valid objection may notify the same to the bar Council with in ten days.

Kavin Ragav.M

## வெளிநாட்டு மைதானத்தில்
# மிகப் பெரிய டெஸ்ட் வெற்றியை பதிவு செய்த இந்திய இளம் அணி

**பர்மிங்காம், ஜூலை 08-**



வெளிநாட்டில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் பெற்ற 'மிகப்பெரிய வெற்றி' என்ற சாதனையை இந்திய அணி படைத்துள்ளது.

**இமாலய இலக்கு...**

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் எட்ஜ்பாஸ்டனில் நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்சில் இந்தியா 587 ரன்கள் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்சில் விளையாடிய இங்கிலாந்து 407 ரன்னில் ஆல்அவுட் ஆனது. 180 ரன்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்சை தொடங்கிய இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 427 ரன்கள் அடித்து டிக்ளேர் செய்தது. இதன்மூலம் இங்கிலாந்துக்கு 608 ரன்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

**அபார வெற்றி...**

இதனை தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணி 271 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம், இந்திய அணி 336 ரன்கள் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெறறது. முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்திடம் தோல்வியடைந்த இந்திய அணி, 2வது டெஸ்ட் போட்டியில் வரலாற்று வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம், 5 போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என சமனில் உள்ளது.

**மிகப்பெரிய வெற்றி...**

இந்நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான 2வது டெஸ்டில் 336 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதன் மூலம் வெளிநாட்டில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் பெற்ற 'மிகப்பெரிய வெற்றி' என்ற சாதனையை இந்திய அணி படைத்துள்ளது.

## பேட்ஸ்மேனாக சிந்தித்தால்
# ரிஸ்க் எடுக்க முடியாது: கில்

**பர்மிங்காம், ஜூலை 08-**

கேப்டனாக இருந்து கொண்டு பேட்ஸ்மேனாக சிந்தித்தால் ரிஸ்க் எடுக்க முடியாது என இந்திய அணியின் கேப்டன் சுப்மன் கில் தெரிவித்துள்ளார்.

**இமாலய வெற்றி...**

இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் முதலாவது டெஸ்டில் இந்தியா தோல்வியடைந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நடைபெற்றது. இதில் இந்திய அணி 336 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இது பர்மிங்காம் மைதானத்தில் இந்திய அணி பெற்ற முதல் டெஸ்ட் வெற்றி இதுவாகும். இதற்கு முன்னர் இங்கு விளையாடிய 8 டெஸ்டில் ஆடி 7-ல் தோல்வியும் ஒன்றில் டிராவும் கண்டிருந்தது.

**சிறப்பாக இருந்தது...**

இந்நிலையில் பேட்ஸ்மேனாக சிந்தித்தால் ரிஸ்க் எடுக்க

முடியாது என இந்திய அணியின் கேப்டன் சுப்மன் கில் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- முதல் போட்டிக்கு பின் நாங்கள் பேசிய விஷயங்களில் இந்தப் போட்டியில் சிறப்பாக செயல்பட்டோம். எங்களுடைய பவுலிங் மற்றும் பீல்டிங் பார்ப்பதற்கு சிறப்பாக இருந்தது. இது போன்ற பிட்ச்சில் 400 - 500 ரன்கள் அடித்தால் எங்களால் வெற்றியின் அருகே இருக்க முடியும் என்பது தெரியும்.

**இதயத்திலிருந்து...**

ஒவ்வொரு முறையும் நாங்கள் நிறைய கேட்ச்களை மிஸ் செய்ய மாட்டோம். ஆகாஷ் தீப் தம்முடைய இதயத்திலிருந்து பவுலிங் செய்தார். அவர் வீசிய லென்த், இடங்கள் பந்தை இருபுறமும் நகர்த்திய விதம் அற்புதமானது. இது போன்ற பிட்ச்சில் அதை செய்வது கடினமானது. எங்களுடைய பவுலர்கள் இங்கிலாந்தின் டாப் ஆர்டரை ஆட்டிப் பார்த்தது அற்புதமானது.

**ரிஸ்க் எடுக்க முடியாது...**

நான் எப்போதும் பேட்ஸ்மேனாக விளையாடி முடிவுகளை எடுக்க விரும்புகிறேன்.கேப்டனாக இருந்து கொண்டு பேட்ஸ்மேனாக சிந்தித்தால் ரிஸ்க் எடுக்க முடியாது.

அடுத்த போட்டியில் பும்ரா கண்டிப்பாக விளையாட வருவார். லார்ட்ஸ் போன்ற மைதானத்தில் உங்களுடைய நாட்டின் கேப்டனாக செயல்படுவதை விட வேறு கவுரவம் இருக்க முடியாது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கால்பந்து முதல் ஹால் ஆப் பேம் வரை...
# தல தோனி கடந்து வந்த பாதை

**மும்பை, ஜூலை 08-**



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனும், உலகின் மிகச் சிறந்த விக்கெட் கீப்பர்களில் ஒருவரான மகேந்திர சிங் தோனி நேற்று தனது 44-வது பிறந்தநாளை கொண்டாடினார். அவருக்கு பலரும் வாழ்த்துக்களை தெரிவித்தனர். இந்நிலையில் தோனி அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் நிகழ்த்திய சாதனைகள் நாம் ஒருமுறை புரட்டி பார்க்கலாம்.

**கால்பந்து ஆர்வம்...**

தோனி தனது கிரிக்கெட் பயணத்தை பள்ளி அணிகளில் விளையாடுவதன் மூலம் தொடங்கினார். ஆரம்பத்தில் கால்பந்து விளையாட்டில் ஆர்வம் காட்டிய அவர், பின்னர் கிரிக்கெட் பயிற்சியாளர் கேசவ் பானர்ஜியின் ஊக்குவிப்பால் கிரிக்கெட் விளையாட தொடங்கினார். தொடர்ந்து விளையாடிய அவர் முதல் தர கிரிக்கெட்டில் 1999-2000ல் பீகார் அணிக்காக ரஞ்சி டிராபியில் அறிமுகமானார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அவர் இந்திய அணியில் இடம் பெற்றார்.

**டி20 கேப்டன்...**

ஒருநாள் கிரிக்கெட்டில் வங்கதேசத்துக்கு எதிராக 2004-ம் ஆண்டும் டெஸ்ட் கிரிக்கெட்டில் இலங்கைக்கு எதிராக 2005ம் ஆண்டும், டி20யில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக 2006-ம் ஆண்டும் இந்திய அணியில் தோனி அறிமுகமானார். அதனை தொடர்ந்து 2007ல் இந்திய டி 20 அணியின் கேப்டனாக தோனி நியமிக்கப்பட்டார். 2008 முதல் 2014 வரை டெஸ்ட் அணியையும், 2007 முதல் 2016 வரை ஒரு நாள் அணியையும் வழிநடத்தினார்.

**உலக கோப்பைகள்...**

தோனியின் தலைமையில் 2007 ஆம் ஆண்டு இந்தியா முதல் டி20 உலகக் கோப்பையை வென்றது. அதன்பின் 2011 ஆம் ஆண்டு தோனி தலைமையிலான இந்திய அணி ஒருநாள் உலகக்கோப்பையை வென்றது. 1983 ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையிலான இந்திய அணிக்கு பிறகு அதுவும் 28 ஆண்டுகளுக்குப் பிறகு தோனி தலைமையிலான இந்திய அணி ஒருநாள் உலகக்கோப்பையை வென்றது.

**ஒரே கேப்டன்...**

2013 ஆம் ஆண்டு சாம்பியன்ஸ் டிராபி வெற்றிக்கு பின்பு ஐ.சி.சி. யின் மூன்று முக்கிய கோப்பைகளையும் (டி20 உலகக் கோப்பை, ஒரு நாள் உலகக் கோப்பை, சாம்பியன்ஸ் ட்ராபி) வென்ற ஒரே கேப்டன் என்ற பெருமையை தோனி பெற்றார். 2009ல் இந்திய டெஸ்ட் அணியை ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்திற்கு அழைத்துச் சென்றார்.

**சி.எஸ்.கே. அணி...**

சென்னை சூப்பர் கிங்ஸ் (சி.எஸ்.கே.): 2008 முதல் சி.எஸ்.கே. அணியின் கேப்டனாக இருந்து, அணியை 5 முறை (2010, 2011, 2018, 2021, 2023) சாம்பியனாக்கினார். தோனியின் தலைமை மற்றும் ரசிகர் ஆதரவால் சி.எஸ்.கே. உலகளவில் மிகவும் பிரபலமான ஐ.பி.எல். அணிகளில் ஒன்றாக உள்ளது. பத்ம ஸ்ரீ (2009), பத்ம பூஷண் (2018), ராஜீவ் காந்தி கேல் ரத்னா (2007-08), ஐ.சி.சி. ஒருநாள் வீரர் விருது (2008, 2009) ஆகிய விருதுகளை தோனி வென்றுள்ளார்.

**காதல் திருமணம்...**

தோனி கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் தேதி சாக்சி என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். எம்.எஸ்.தோனி - சாக்சி தம்பதிக்கு ஸிவா என்ற ஒரு மகள் இருக்கிறாள். கிரிக்கெட்டுக்கு அடுத்தபடியாக தோனிக்கு மோட்டார் பைக்குகள் மற்றும் கார்களின் மீது தீவிர ஆர்வம் உள்ளது. இதன் காரணமாக அவர் தனது வீட்டில் நிறைய கார் மற்றும் பைக்குகளை சேகரித்து வைத்துள்ளார்.

**ஹால் ஆப் பேம்...**

தோனியின் சாதனைகளை பெருமைப்படுத்தும் வகையில், ஐ.சி.சி. ஹால் ஆப் பேமில் சேர்க்கப்பட்டுள்ளார். இது இந்திய கிரிக்கெட்டுக்கு ஒரு பெரிய கவுரவமாகும். தோனி, ஹால் ஆப் பேமில் சேர்க்கப்பட்ட 11-வது இந்தியர் ஆவார். தோனி இந்திய கிரிக்கெட்டில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியவர். சிறிய நகரத்தில் பிறந்து, தனது திறமை மற்றும் உழைப்பால் உலகளவில் புகழ் பெற்றார். அவரது அமைதியான தலைமை, முடிவெடுக்கும் திறன் மற்றும் எளிமையான பண்பு இளைஞர்களுக்கு உத்வேகமாக உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## தோனிக்கு முதல்வர் பிறந்தநாள் வாழ்த்து

**சென்னை, ஜூலை 08-**

"அழுத்தமான சூழ்நிலையையும் கவிதையாய் மாற்றும் தனித்துவமிக்கவர்" என்று கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனிக்கு முதல்வர் ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் சமூகவலைதளப் பக்கத்தில், "அழுத்தமான சூழ்நிலையையும் தனது ஒவ்வொரு நகர்வின் மூலம் கவிதையாய் மாற்றிய கிரிக்கெட்டின் தனித்துவமிக்க அரிய வீரர் மகேந்திர சிங் தோனிக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.

பெருமை பிறப்பிலேயே வருவதல்ல, எடுக்கும் ஒவ்வொரு முடிவினாலும், ஒவ்வொரு ஓட்டத்தினாலும், அமைதியாக ஈட்டுகின்ற ஒவ்வொரு வெற்றியாலும் கட்டமைக்கப்படுவது அது என நீங்கள் காட்டியிருக்கிறீர்கள்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கை குறைக்கப்படாது: அமைச்சர் கீதா ஜீவன்

**சென்னை, ஜூலை 08-**

தமிழ்நாட்டில் அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கை குறைக்கப்படாது என்று கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி. கீதா ஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு முழுவதும் இந்த ஆண்டு மட்டும் 501 அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டுள்ளதாக நாளிதழில் வெளியான செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

அரசிற்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வண்ணம் தொடர்ந்து இதுபோன்ற உண்மைக்கு புறம்பான செய்தி பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இவ்வரசு 2021-ஆம் ஆணடு பொறுப்பேற்றபோது 54,439 அங்கன்வாடி மையங்கள் மட்டுமே தமிழகத்தில் செயல்பட்டு வந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில், மேலும் கூடுதலாக 44 அங்கன்வாடி மையங்கள் புதிதாக அனுமதிக்கப்பட்டு தற்போது 54,483 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை, அனைத்து குழந்தைகள் மையங்களும் தற்போது வரை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அவ்வெண்ணிக்கை ஒருபோதும் குறைக்கப்படாது. தேவைப்படின், கூடுதலாக அங்கன்வாடி மையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நிலைமை இவ்வாறு இருக்க, தற்போது 54,483 குழந்தைகள் மையங்கள் செயல்பட்டு வரும் தருணத்தில் புதிதாக 501 மையங்கள் மூடப்பட்டுள்ளன என்ற செய்தி உண்மைக்கு புறம்பானதாகும். மேலும், தற்போது 7,783 அங்கன்வாடி காலிப்பணி இடங்களை நிரப்ப அரசாணை வெளியிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் நேர்முகத் தேர்வு நடைபெற்று வருகின்றது. விரைவில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பிறந்தநாள் கொண்டாடிய தோனி

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனான எம்.எஸ்.தோனி. இந்திய அணிக்காக ஒருநாள் உலகக்கோப்பை, டி20 உலகக்கோப்பை, சாம்பியன்ஸ் டிராபி கோப்பைகளை வென்று கொடுத்த மகத்தான கேப்டன்.

இவர் ஜூலை 08- தனது 44-வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு பல்வேறு தரப்பினரும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், தோனி தனது பிறந்தநாளை நண்பர்களுடன் கேக் வெட்டி கொண்டாடியுள்ளார். இது தொடர்பான வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகியுள்ளது.

## திருப்பூர் தமிழன்ஸ் சாம்பியன்

திண்டுக்கல்லில் நடந்த டி.என்.பி.எல். இறுதி ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த ஐட்ரீம் திருப்பூர் தமிழன்ஸ் அணி 5 விக்கெட்களை இழந்து 220 ரன்களை குவித்தது. இதைத்தொடர்ந்து, களமிறங்கிய திண்டுக்கல் டிராகன்ஸ் 14.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 102 ரன்கள் மட்டுமே திரட்டி படுதோல்வியடைந்தது.

இதன்மூலம், 118 ரன்கள் வித்தியாசத்தில் ஐட்ரீம் திருப்பூர் தமிழன்ஸ் அணி அபார வெற்றியை பதிவு செய்துள்ளது. டிஎன்பிஎல் சாம்பியன் பட்டத்தை முதல்முறையாக ஐட்ரீம் திருப்பூர் தமிழன்ஸ் அணி பெற்றுள்ளது.

## வெற்றியை சமர்ப்பித்த ஆகாஷ்

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இங்கிலாந்தை 336 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய ஆகாஷ் தீப் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார். முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகளையும் அவர் கைப்பற்றினார். இங்கிலாந்துக்கு எதிராக அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய நிலையில், இந்த வெற்றியை புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தனது சகோதரிக்கு சமர்ப்பித்தாக ஆகாஷ் தீப் தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

இது தொடர்பாக அவர் பேசியதாவது: இரண்டு மாதங்களுக்கு முன்பாக எனது சகோதரி புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. இது குறித்து யாரிடமும் நான் எதுவும் பேசவில்லை. ஒவ்வொரு முறையும் பந்துவீசுவதற்காக பந்தினை கையில் எடுக்கும்போதெல்லாம், என்னுடைய சகோதரியின் நினைவு எனக்கு வரும். பந்துவீச்சில் நான் சிறப்பாக செயல்பட்டதை நினைத்து அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார். என்னுடைய இந்த சிறப்பான செயல்பாட்டை எனது சகோதரிக்காக சமர்ப்பிக்கிறேன். நாங்கள் அனைவரும் உங்களுடன் இருக்கிறோம் என்பதை அவரிடம் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என்றார்.

## சேத்தன் சர்மாவின் சாதனை சமன்

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இங்கிலாந்தை 336 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய ஆகாஷ் தீப் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார்.

முதல் இன்னிங்சில் 4 விக்கெட், 2-வது இன்னிங்சில் 6 விக்கெட் என மொத்தம் 10 விக்கெட்டுகளை கைப்பற்றிய ஆகாஷ் தீப் இங்கிலாந்து மண்ணில், 10 விக்கெட் கைப்பற்றிய 2-வது இந்திய மாபெரும் சாதனையை சமன் செய்துள்ளார். இதற்கு முன்னர் 1986-ம் ஆண்டு இதே மைதானத்தில் சேத்தன் ஷர்மா 10 விக்கெட் வீழ்த்தியிருந்தார். அவரது 10 ஆண்டு கால சாதனையை தற்போது ஆகாஷ் தீப் சமன் செய்துள்ளார்.

## ஐ.சி.சி. சிறந்த வீரர் பட்டியல்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்து கவுரவித்து வருகிறது. அதன்படி ஜூன் மாத சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகள் கொண்ட பரிந்துரை பெயர் பட்டியலை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

அதன்படி ஜூன் மாத சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் தென் ஆப்பிரிக்காவின் எய்டன் மார்க்ரம் மற்றும் ரபடாவும், இலங்கை வீரரான பதும் நிசங்காவும் இடம் பெற்றுள்ளனர். இதேபோல் சிறந்த வீராங்கனைக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் ஹேய்லி மேத்யூஸ் (வெஸ்ட் இண்டீஸ்), தஸ்மின் பிரிட்ஸ் (தென் ஆப்பிரிக்கா) மற்றும் அபி பிளெட்சர் (வெஸ்ட் இண்டீஸ்) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## விருதுநகர் உள்ளிட்ட இடங்களில் ரூ.38 கோடியில்
# இலங்கை தமிழர் முகாம்களில் கட்டப்பட்ட 729 புதிய வீடுகள்
### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, ஜூலை 08-**



விருதுநகர் உள்ளிட்ட இடங்களில் ரூ.38 கோடியில் இலங்கை தமிழர் முகாம்களில் கட்டப்பட்ட 729 புதிய வீடுகளை நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 36 கோடியே 62 லட்சம் ரூபாய் செலவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூடுதல் கட்டிடம், 17 கோடியே 52 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் செலவில் 4 வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் 65 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் 2 வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிடங்கள், என மொத்தம் 54 கோடியே 80 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டிப் பட்டுள்ள கட்டிடங்களை திறந்து வைத்தார்.

மேலும் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம் கீழ் புத்துப்பட்டு, திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி நகர், சேலம் மாவட்டம் தம்மம்பட்டி, தருமபுரி மாவட்டம் நாகாவதி அணை மற்றும் கேசர்குளி அணை, விருதுநகர் மாவட்டம் கண்டியாபுரம் ஆகிய இடங்களில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 38 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் கட்டிப்பட்டுள்ள 729 வீடுகளை திறந்து வைத்தார்.




**அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தனது முதலாவது பிரச்சாரப் பயணத்தை கோவை மாவட்டம்மேட்டுப்பாளையத்தில்நேற்றுதொடங்கினார்.அதைத்தொடர்ந்துதேக்கம்பட்டியில் உள்ள திருமண மண்டபத்தில் விவசாய அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகளுடன் அவர் கலந்துரையாடினார்.**

# அரசு கலை கல்லூரிகளில் நடப்பாண்டு 20 சதவீதம் கூடுதல் இடங்கள்: அமைச்சர்

**சென்னை, ஜூலை 08-**

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நடப்பாண்டில் 20% கூடுதல் மாணாக்கர் சேர்க்கை இடங்கள் வழங்கப்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:- கடந்த நான்காண்டுகளில் உயர்கல்வி சேர்க்கை பெறும் மாணாக்கர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்தியாவிலேயே மாணாக்கர் சேர்க்கை விகிதத்தில் தொடர்ந்து தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது.

இவ்வாண்டும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைக்காக அதிகளவில் மாணாக்கர்கள் விண்ணப்பத்து காத்திருக்கின்றனர். இதனை அறிந்திருந்த முதல்வர் இவ்வாண்டு புதிதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கிட ஆணையிட்டு, தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

இருப்பினும் உயர்கல்வி பயில பெருமளவில் மாணாக்கர்கள் காத்திருப்பதை அறிந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கூடுதலாக 20% மாணவர் சேர்க்கை இடங்கள் உயர்த்தி வழங்கவும், அதேபோல் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 15% இடமும், சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 10% இடமும் கூடுதலாக மாணவர் சேர்க்கை இடங்கள் உயர்த்தி வழங்கவும் தமிழ்நாடு முதல்வர் அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, இவ்வாண்டு மேற்படி கூடுதல் இடங்கள் அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில்
# பொறியியல் படிப்புகளுக்கான சிறப்பு கலந்தாய்வு துவங்கியது

**சென்னை, ஜூலை 08-**

தமிழகத்தில் பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வு இணையவழியில் நேற்று காலை தொடங்கியது.

அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படும் 445 அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் பி.இ. மற்றும் பி.டெக். படிப்புகளுக்கு சுமார் 2 லட்சம் இடங்களை இந்தக் கலந்தாய்வு மூலம் நிரப்பவிருக்கிறது.

மூன்று சுற்றுகளாக இந்த கலந்தாய்வு நடைபெறுகிறது. கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 41,773 பேர் கூடுதலாக விண்ணப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நேற்று தொடங்கி ஆகஸ்ட் 26ஆம் தேதி வரை இணையவழியில் நடைபெற உள்ளது. முதற்கட்டமாக சிறப்புப் பிரிவுக்கான கலந்தாய்வு ஜூலை 7 முதல் ஜூலை 11 வரை நடைபெறும்.

அதன்படி, அரசுப் பள்ளியில் படித்த மாணவர்கள், மாற்றுத்திறனாளி மாணவர்கள், விளையாட்டுப் பிரிவினர், ராணுவ வீரர்களுக்கான வாரிசுகள் உள்ளிட்டவர்கள் சிறப்புப் பிரிவினர் வரிசையில் வருவார்கள். பொதுப் பிரிவுக்கான கலந்தாய்வு ஜூலை 14 முதல் ஆக.19 வரையிலும், துணை கலந்தாய்வு ஆக.21 முதல் ஆக.23 வரையிலும் நடைபெறும். இந்த கலந்தாய்வு முழுவதும் இணைய தளம் மூலமாக நடைபெறும். கலந்தாய்வு முழுக்க www.tneaonline.org என்ற இணையதளம் மூலம் நடைபெறுகிறது.

## பயங்கரவாதிகளுக்கு உதவி:
# 2 பேருக்கு என்.ஐ.ஏ. காவல் நீட்டிப்பு

**ஸ்ரீநகர், ஜூலை 08-**

பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்து உதவியதாக கைது செய்யப்பட்ட 2 பேருக்கு மேலும் 10 நாட்கள் என்.ஐ.ஏ. காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலா தளத்தில் கடந்த ஏப்ரல் 22-ந் தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான 'தி ரெசிஸ்டண்ட் பிரண்ட்' பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது. இந்த தாக்குதல் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.) விசாரணைக்கு மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது.

இதன்படி பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக என்.ஐ.ஏ. வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகிறது. இதற்கிடையில், பஹல்காம் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்து உதவியதாக 2 பேரை கடந்த ஜூன் 22-ந் தேதி என்.ஐ.ஏ. அதிகாரிகள் கைது செய்தனர். இதன்படி பஹல்காமின் பட்கோலே பகுதியை சேர்ந்த பர்வேஸ் அகமது மற்றும் பஹல்காமின் ஹில்பார்க் பகுதியை சேர்ந்த பஷீர் அகமது ஜோதார் ஆகிய இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பர்வேஸ் மற்றும் பஷீர் ஆகியோர் ஜூன் 23-ந்தேதி உள்ளூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை 5 நாட்கள் என்.ஐ.ஏ. காவலில் எடுத்து விசாரிக்க கோர்ட்டு அனுமதி அளித்தது. பின்னர் இந்த வழக்கு என்.ஐ.ஏ. சிறப்பு கோர்ட்டுக்கு மாற்றப்பட்ட நிலையில், கைது செய்யப்பட்ட இருவரையும் 10 நாட்களில் என்.ஐ.ஏ. காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இந்த 10 நாள் காவல் நேற்றோடு முடிவுக்கு வந்த நிலையில், பர்வேஸ் மற்றும் பஷீர் ஆகியோர் நேற்று மீண்டும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை மேலும் 10 நாட்கள் என்.ஐ.ஏ. காவலில் வைக்க கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# சினிமா CINI செய்திகள்

## ‘பறந்து போ’ திரைவிமர்சனம்



தனது மகனின் ஆசை என்னவென்று தெரிந்து கொள்ளாமல் தான் செல்லாத உயரத்திற்கு தன் மகன் செல்ல வேண்டும் என்று நினைக்கும் ஒரு பெற்றோரின் கதை தான் இந்த பறந்து போ படம். மிர்ச்சி சிவாவும் அவரது மனைவி கிரேஸ் ஆண்டனியும் தங்களது மகனை பெரிய பள்ளியில் படிக்க வைக்கிறார்கள். அவன் கேட்பதை எல்லாம் வாங்கி கொடுத்து அவன் எதைச் செய்தாலும் பாராட்டுகிறார்கள். ஆனால் அவனுக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காது என்பதை அறியாமல் வாழ்கிறார்கள் என்பதனை ஓர் அழகான படைப்பாக கொடுத்து இருக்கிறார் இயக்குனர் ராம்.

இருசக்கர வாகனத்தில் தன் மகனுடன் பயணிக்கும் சிவா, அவனது விருப்பம் பற்றி எப்படி தெரிந்துக் கொள்கிறார் என்பதை சிரித்து மகிழும்படி சொல்லி இருக்கிறார் இயக்குநர் ராம். சிவா எபோதும் போல் அலட்டிக் கொள்ளாமல் நடித்திருப்பதோடு, தனது டைமிங் வசனங்கள் மூலம் குலுங்கி குலுங்கி சிரிக்க வைக்கிறார். சிவாவின் மகனாக நடித்திருக்கும் மித்துல் ரியான், குறும்புத்தனத்தால் ரசிக்கவும் சில இடங்களில் புலம்பவும் வைக்கிறார். கிரேஸ் ஆண்டனி, நடிப்பு மற்றும் நகைச்சுவை இரண்டிலும் கவனம் ஈர்க்கிறார். சிறப்பு தோற்றத்தில் நடித்திருக்கும் அஞ்சலி மற்றும் அவரது கணவராக வரும் அஜு வர்கீஸின் நடிப்பு கைதட்டல் பெறுகிறது.

நாம் சாதாரணமாக கடந்து செல்லும் மலைகள், மரங்கள் என அனைத்தையுமே ரசிக்கும்படி காட்சிப்படுத்தியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் என்.கே.ஏகாம்பரம், யுவன் சங்கர் ராஜாவின் பின்னணி இசை அருமை. பிள்ளைகளின் எதிர்பார்ப்பு மற்றும் அவர்களின் உலகம் ஆகியவற்றுடன் நம்மையும் பயணிக்க வைத்து ரசிக்க வைத்து பறந்து போக வைத்து விடுகிறார் இயக்குனர் ராம்.

## ‘பீனிக்ஸ்’ திரைவிமர்சனம்



அண்ணன் கொலைக்கு பழி வாங்கும் ஒரு தம்பியின் கதை தான் பீனிக்ஸ் படத்தின் ஒரு வரிக்கதை. பொதுமக்கள் முன்னிலையில் பட்டப்பகலில் எம்.எல்.ஏ-வை, வெட்டி கொலை செய்கிறார் நாயகன் சூர்யா சேதுபதி. அவரை கைது செய்யும் போலீஸ் சிறுவர் சீர்த்திருத்த பள்ளியில் அடைக்கிறது. கணவரை கொலை செய்த சூர்யாவை கொலை செய்ய எம்.எல்.ஏ-வின் மனைவி வரலட்சுமி திட்டமிட, அவரது திட்டத்தை தகர்த்தெரிகிறார் சூர்யா சேதுபதி.

மீண்டும் அடுத்தடுத்த திட்டம் அரங்கேறுகிறது, ஆனால் அவற்றில் இருந்து எப்படி தப்பித்து தன்னை வீழானாக நிரூபிக்கிறார் என்பதே கிளைமாக்ஸ். நாயகனாக நடித்திருக்கும் சூர்யா சேதுபதி, முதல் படத்திலேயே பலம் வாய்ந்த கதாபாத்திரத்தை மிக சிறப்பாக கையாண்டிருக்கிறார். அதிரடி காட்சிகளில் மிரட்டுகிறார். அதே போல் சம்பத் ராஜ், வரலட்சுமி, தேவதர்ஷினி, விக்னேஷ், அபி நட்சத்திரா என அனைவரும் திரைக்கதை ஓட்டத்திற்கு பலம் சேர்க்கும் வகையில் நடித்திருக்கிறார்கள். வேல்ராஜின் கேமரா, கதை சொல்லும் வகையில் அழகாக காட்சி படுத்தியிருக்கிறது.

சாம்.சி.எஸின் இசை அருமை. வன்முறை காட்சிகள் தூக்கலாக இருப்பது பார்வையாளர்களை சற்று உறுத்தினாலும், கதைக்களம் மற்றும் கதை மாந்தர்களின் போராட்டங்கள் அவற்றை மறக்கடித்து விடுகிறது. எழுதி இயக்கியிருக்கும் ஸ்டண்ட் மாஸ்டர் அனல் அரசு, எளியவர்களின் வலிமிகுந்த வாழ்க்கையையும், அதில் இருந்து மீள்வதற்காக அவர்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களையும் கதைக்களமாக வைத்துக்கொண்டு, சண்டைக்காட்சிகள் மூலமாகவே கதை சொல்லி, இயக்குநராக அசத்தியிருக்கிறார் அனல் அரசு.

## மேலூர் வட்டாட்சியர் புதிய அலுவலக கட்டிடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்



**மேலூர், ஜூலை 08-**

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், மேலூரில் ரூபாய் 3.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட மேலூர் வட்டாட்சியர் அலுவலக புதிய கட்டிடத்தை சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கட்டிடத்தை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் அவர்கள் குத்துவிளக்கேற்றி வைத்து கட்டிடத்தை பார்வையிட்டார்.

உடன் மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, மேலூர் தாசில்தார் செந்தாமரை, சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் லயனல் ராஜ்குமார், மேலூர் நகர்மன்ற தலைவர் முகமது யாசின், பொதுப்பணி துறை செயற் பொறியாளர் ஜோதி லெட்சுமண காமராஜ், உதவி செயற் பொறியாளர் மீனா, மேலூர் நகராட்சி பொறியாளர் முத்துக்குமார்,அட்டபட்டி குமார், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்,ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், விவசாய சங்கத்தினர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ‘லவ் மேரேஜ்’ படக்குழு நன்றி




அஸ்யூர் பிலிம்ஸ் மற்றும் ரைஸ் ஈஸ்ட் என்டர்டெய்ன்மென்ட் தயாரிப்பில், சக்தி பிலிம் ஃபேக்டரி வெளியீட்டில், அறிமுக இயக்குநர் சண்முகபிரியன் இயக்கத்தில் விக்ரம் பிரபு, சுஷ்மிதா பட், மீனாட்சி தினேஷ் உள்ளிட்ட பலரது நடிப்பில் வெளியான ‘லவ் மேரேஜ்’ திரைப்படம் வெற்றிகரமாக திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் படத்தை வெற்றி பெறச் செய்த ரசிகர்களுக்கும், ஊடகத்தினருக்கும் படக்குழுவினர் நன்றி தெரிவிக்கும் வகையில் விழா ஒன்றினை சென்னையில் ஒருங்கிணைத்திருந்தனர். இவ்விழாவில் விக்ரம் பிரபு பேசுகையில், இந்த படம் வெளியான பிறகு சென்னை மற்றும் மதுரை உள்ள திரையரங்கத்திற்கு சென்று ரசிகர்களை சந்தித்த போது அவர்களின் அன்பு என்னை வியக்க வைத்தது.

சென்னையில் நாங்கள் குழுவாக திரையரங்கத்திற்கு சென்ற போது மிகப்பெரும் ஆரவாரமான வரவேற்பு கிடைத்தது. இந்தப் படத்தை அவர்கள் எந்த அளவிற்கு அனுபவித்து ரசித்து இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது. ரசிகர்கள் இந்தப் படக் குழு மீது காட்டிய அன்பிற்கும் இந்த படத்தின் மீது ஊடகத்தினர் காட்டிய அன்பிற்கும் நன்றி என்றார்.

## ‘ஜுராசிக் பார்க்’ ரீபெர்த் விமர்சனம்



ஜுராசிக் பார்க் இதுவரை 2 அத்தியாயம் முடிந்து தற்போது மூன்றாவது அத்தியாயம் வெளியாகியுள்ளது. எட்வர்ட் இயக்கத்தில் ஸ்கார்லட் ஜான்சன் நடிப்பில் தற்போது இப்படம் வெளிவந்துள்ளது. கதை - மக்களுக்கு ஒரு புதிய நோய் உருவாகி 5 பேரில் ஒருவர் இறப்பார்கள் என்ற நிலை உருவாக உள்ளதாக தெரிய வருகிறது. இதனை குணப்படுத்தும் மருந்து டைனோசர்களிடம் தான் உள்ளது என அறிந்து அதை எடுக்க ஒரு டீம் கடல் வழியாக கப்பலில் புறப்படுகிறது.

அதே நேரம் கடலில் தத்தளிக்கும் ஒரு குடும்பத்தினரை காப்பாற்றி தங்களுடன் அவர்கள் அழைத்துச் செல்கிறார்கள். அதை தொடர்ந்து இவர்கள் அனைவரும் டைனோசர்கள் வாழும் தீவில் மாட்டிக்கொள்ள பிறகு என்ன ஆனது என்பதே ஜுராசிக் பார்க் ரீபெர்த் படம் சொல்லும் கதை.

ஸ்பீல்பெர்க் உருவாக்கிய ஒரு உலகம் பல ஆண்டுகள் கழித்தும் இன்றும் ரசிகர்கள் மத்தியில் பெரும் ஆவலுடன் இருக்கிறது, எத்தனை பாகங்களை உருவாக்கினாலும், ஜுராசிக் பார்க் சீரிஸ் என்றாலே ஒரு பதட்டம் எமோஷனல் என அனைத்தும் இருக்கும், அது இந்த பாகத்தில் மிஸ்ஸிங் என்று தான் சொல்ல வேண்டும். ஒரு குடும்பம் கடலில் தத்தளிக்கும் காட்சி பரபரப்பாக உள்ளது. ஜுராசிக் பார்க் ரீபெர்த் ஒரு முறை பார்க்கலாம்

## ராமநாதபுரம் மாவட்டத்தில் கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர் கூட்டம்



**ராமநாதபுரம், ஜூலை 08-**

ராமநாதபுரத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங்காலோன் தலைமையில் நடந்தது.

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 345 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனைபட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். அதனைத்தொடர்ந்து மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும்எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ந.சரவணன், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் கிருஷ்ணகுமாரி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் செல்வி, மாவட்ட வழங்கல் அலுவலர் மணிமாறன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ‘3 பி.ஹெச்.கே’ திரை விமர்சனம்



மனைவி, மகன், மகள் என்று குறைவான வருமானத்தில் வாழும் சரத்குமார், சொந்தமாக வீடு வாங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். அதே சமயம், தன்னைப் போல் தனது மகனின் எதிர்கால வாழ்க்கை அமைந்து விடக் கூடாது என்பதற்காக தனது சக்திக்கு மீறி மகனின் படிப்புக்கு செலவு செய்கிறார். வீடு வாங்கும் அவரது முயற்சி பல இடையூறுகளால் தொடர்ந்து தோல்வியில் முடிகிறது. அப்பாவின் சொந்த வீடு கனவு, மகனின் கனவாக மாறினாலும் இறுதியில் என்னவானது என்பதை நடுத்தர குடும்பத்தினர் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்களோடு சொல்லியிருக்கும் படமே 3பி.ஹெச்.கே.

சரத்குமார், அழுத்தமான வேடத்தில் அளவாக நடித்து பாராட்டு பெருகிறார். நாயகன் சித்தார்த், குடும்பத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாமல் போவது, பள்ளி, கல்லூரி மாணவராக ஏற்றுக் கொள்ளும்படி அமைந்திருப்பது படத்திற்கு பெரும் பலம் சேர்த்திருக்கிறது. தேவயானி, மீதா ரகுநாத், சைத்ரா, யோகி பாபு ஆகியோர் அருமையான நடிப்பைக் கொடுத்திருக்கிறார்கள்.

அம்ரித் ராம்நாத் இசையில் பாடல்கள் அனைத்தும் முனு முனுக்க வைக்கிறது. எழுதி இயக்கியிருக்கும் ஸ்ரீ கணேஷ், சொந்த வீடு என்ற கருவை வைத்துக்கொண்டு, நடுத்தர குடும்பத்தினர் தங்களை தொடர்புபடுத்திக் கொள்ளும் திரைக்கதையை உணர்வுப்பூர்வமாக சொல்லியிருக்கிறார். மொத்தத்தில் ஒவ்வொரு நடுத்தர மனிதர்களும் கடந்து போகும் கதையை, அவர்களுக்கான படமாக கொடுத்து யோசிக்க வைத்திருக்கிறார் இயக்குனர்.

## ரசிகர்களுக்கு விஜய் ஆண்டனி நன்றி



லியோ ஜான் பால் இயக்கத்தில் விஜய் ஆண்டனி, அஜய் தீசன் சமுத்திரக்கனி, பிரிகிடா தீப்ஷிகா உள்ளிட்டோர் நடிப்பில் கடந்த ஜூன் 27 அன்று வெளியான படம் மார்கன். இந்த திரைப்படம் வெற்றிகரமாக திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் படத்தை வெற்றி பெறச் செய்த ரசிகர்களுக்கும், ஊடகத்தினருக்கும் படக்குழுவினர் தங்கள் நன்றியை தெரிவித்துக்கொண்டனர். விழாவில் தயாரிப்பாளர் தனஞ்செயன் மற்றும் இயக்குனர் சுசீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது பேசிய விஜய் ஆண்டனி, இந்த படத்தை வெற்றி பெறச் செய்த மக்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். நல்ல விமர்சனத்தை பெற்றுள்ள இப்படம் 5 நாள் முடிவில் ரூ. 5 கோடிக்கு மேல் வசூல் வேட்டை செய்துள்ளது.

## சிவகங்கை சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவில் தேரோட்டம் தொடர்பாக ஆலோசனை கூட்டம்



**சிவகங்கை, ஜூலை 08-**

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கண்டதேவி கிராமத்தில் அமைந்துள்ள சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவில் தேரோட்டம் நடைபெறவுள்ளதைத் முன்னிட்டு, சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவில் தேரோட்டம் தொடர்பாக, மாவட்ட கலெக்டர் பொற்கொடி, தேரோட்ட பொறுப்பு அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் மேற்கொண்டு, அதனைத்தொடர்ந்து, சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவிலில் நேரில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டத்திற்குட்பட்ட கண்டதேவி கிராமத்திலுள்ள சிறகிலிநாதர் சுவாமி என்ற சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவில் தேரோட்ட நிகழ்ச்சி கடந்தாண்டு சிறப்பாக நடைபெற்றது.

கடந்தாண்டை போலவே, இந்தாண்டும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் ஒருங்கிணைந்து சிறப்பாக, கோவில் தேரோட்ட நிகழ்ச்சியை நடத்திட சிறப்பான பங்களிப்பை அளித்திடல் வேண்டும். இப்பணிக்கென சம்மந்தப்பட்ட துறைகள் வாரியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், தேவகோட்டை சார் ஆட்சியர் மூலம் தேர் இழுப்பவர்களுக்கு உரிய அனுமதி சீட்டு வழங்கப்படவுள்ளது. மற்ற அலுவலர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களுக்கு தேவகோட்டை சார் ஆட்சியர் மூலம் வழங்கப்படவுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தேவஸ்தானம், தேரோட்டம் அன்று, கோவில் ஆகம வழக்கப்படி நடைமுறைகளை பின்பற்றியும், தேரோத்தன்று தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, மருத்துவத்துறை மூலம் 3 மருத்துவ குழுக்களும், 3 அவசர கால ஊர்திகளும் தயார் நிலையில் வைத்திடவும், தீயணைப்புத்றை மூலம் 2 தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைத்திடவும், கோவில் தெப்பக்குளத்தின் அருகில் தீயணைப்பு மீட்பு வீரர்களும் பணியில் அமர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் தேர் சுற்றி வரும் தார்சாலையை சரிசெய்தல் மற்றும் பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல், வாகன நிறுத்துமிடங்களை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் மூலம் பக்தர்களை அழைத்து வருவதற்கு பேருந்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மற்ற ஏனைய சம்மந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் தங்களுக்கான பணிகளை முறையாக மேற்கொண்டு, கோவில் தேரோட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து சிறப்பான பணியினை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் பொற்கொடி, தெரிவித்தார். இக்கூட்டத்தில், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித்துறை, காவல்துறை, பொதுப்பணித் துறை, மருத்துவத்துறை, மின்சாரத்துறை, போக்குவரத்து துறை, தீயணைப்புத்துறை, உணவு பாதுகாப்புத் துறை உள்ளிட்ட அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அரசு கல்லூரி எதிரில் நிழற்குடை அமைக்க மாணவர்கள் கோரிக்கை

**திருமங்கலம், ஜூலை 08-**

மதுரை மாவட்டம்,திருமங்கலம் அருகேயுள்ள கப்பலூரில் திருமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இங்கு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ,மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இந்நிலையில் திருமங்கலம் நகரிலிருந்து மதுரை சென்றிடும் சாலையில் அமைந்துள்ள இந்த கல்லூரியின் அருகில் மட்டும் நிழற்குடை அமைக்கப்பட்டு உள்ளது.இருப்பினும் மதுரையிலிருந்து திருமங்கலம் வரும் வழியில் உள்ள கல்லூரி நிறுத்தமான தியாகராஜர் ஆலை பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை அமைக்கப்படவில்லை.

இதனால் கல்லூரி முடிந்து திருமங்கலம் நோக்கி பயணித்திடும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ,மாணவியர் மழைக்காலத்தில் மழையில் நனைந்தும், கோடைகாலத்தில் வெயிலில் சிக்கியும் தவித்து வருகின்றனர்.நிழற்குடை இல்லாமல் வெயிலில் நின்றபடி தவித்திடும் மாணவ,மாணவியர் சிலநேரங்களில் மயங்கி விழுந்திடும் அவலநிலையும் காணப்படுகிறது.எனவே மழைக்காலம் மற்றும் கோடை கால வெயிலினை கருத்தில் கொண்டும் திருமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ,மாணவியரின் நலனில் அக்கறை கொண்டும் கப்பலூர் தியாகராஜர் ஆலை பேருந்து நிறுத்தத்தில் புதிய நிழற்குடை அமைத்து தந்திடுமாறு மாவட்ட நிர்வாகத்திற்கும், கல்வி அதிகாரிகளுக்கும் மாணவ, மாணவியர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நத்தம் அரசுகலை கல்லூரியில் 6 நாட்கள் பயிற்சி முகாம்

**நத்தம், ஜூலை 08-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் புதிதாக தொடங்கபட்ட அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான பயிற்சி முகாம் ஆறு நாட்கள் நடந்தது. இதற்கு கல்லூரி முதல்வர் ராஜாராம் தலைமை தாங்கினார். கணினி அறிவியல்துறை தலைவர் சுப்பிரமணி, வணிகநிர்வாகவியல் தலைவர் அமுதா, வணிகவியல் துறை தலைவர் சௌந்தரராஜ், அறிவியல் துறை தலைவர் சுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வரலாற்றுத்துறை தலைவர் சரவணன் வரவேற்றார். முகாமில் பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டு அரசின் சேவை, வேலைவாய்ப்புகள், சைபர் கிரைம் குற்றங்கள், மனநலம் சார்த்த விழிப்புணர்வு மற்றும் மாணவர்கள் பணியாற்ற வேண்டிய கடமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினர். இதில் தமிழ்துறை துணை தலைவர் தண்டபாணி உள்ளிட்ட பேராசியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் போக்குவரத்துத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர்கள் க.பணீந்திரரெட்டி, மங்கத்ராம் சர்மா, பிரதீப்யாதவ், முதன்மைச்செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூர் கேவில் கும்பாபிஷேகத்திற்கு 5 லட்சம் பேர் வருகை: அமைச்சர் தகவல்



தூத்துக்குடி, ஜூலை 08-

கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு திருச்செந்தூருக்கு சுமார் 5 லட்சம் பேர் வருகை தந்துள்ளனர் என அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடாக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சுமார் 16 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று (திங்கட்கிழமை) மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடந்தது.

காலை 6.15 மணிக்கு ராஜ கோபுரத்தின் கும்ப கலசங்களுக்கு மகா கும்பாபிஷேகம் நடந்தது. அதே நேரத்தில் கோவில் விமான தளத்தில் உள்ள மூலவர், சண்முகர், வள்ளி, தெய்வானை, பெருமாள், நடராஜர் கோபுர கலசங்களுக்கு கும்பாபிஷேகம் நடந்தது. பின்னர் அனைத்து பரிவார மூர்த்தி சுவாமிகளுக்கும் கும்பாபிஷேகம் நடந்தது. இந்த மகா கும்பாபிஷேக விழாவில் தமிழ் வேதங்கள் ஓதப்பட்டன. கும்பாபிஷேகம் முடிந்த பின்னர் 20 டிரோன்கள் மூலம் பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது.

இந்த கும்பாபிஷேக விழாவில் அமைச்சர் சேகர்பாபு, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதேபோன்று திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம் ஆகியோரும் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டனர். மகா கும்பாபிஷேக நிகழ்ச்சியை காண்பதற்காக லட்சக்கணக்கான பக்தர்கள் திருச்செந்தூருக்கு வருகை தந்துள்ளனர்.

இதனிடையே அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசுகையில்,

கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு திருச்செந்தூருக்கு சுமார் 5 லட்சம் பேர் வருகை தந்துள்ளனர். இன்னும் ஏராளமான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருச்செந்தூர் கும்பாபிஷேக விழா என்பது பக்தர்கள் மாநாடு, பா.ஜ.க.வினரின் மாநாடு அல்ல" என்று தெரிவித்தார்.




● சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் நேற்று தமிழ்நாடு அரசின் சார்பில் இரட்டைமலை சீனிவாசனின் பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவ படத்திற்கு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் வே.ராஜாராமன், இரா.வைத்தியநாதன் ஆகியோர் உள்ளனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் தலைமையில் அயலகத்தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்ந்த அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் மறுவாழ்வுத்துறை செயலாளர் ரீட்டா ஹரிஷ்தக்கர், அரசு சிறப்பு செயலாளர் சஜ்ஜன்சிங் ரா சவான் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




● 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பிரசார சுற்றுப்பயணத்தை நேற்று முதல் தொடங்கிய அ.திமு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி நேற்று மேட்டுப்பாளையம்-ஊட்டி சாலை காந்தி சிலை அருகே ரோடுஷோவில் கலந்து கொண்டார். பின்னர் மேட்டுப்பாளையம் பேருந்து நிலையம் அருகில் பிரச்சார வாகனத்தில் நின்றவாறு பொதுமக்களிடையே அவர் உரையாற்றினார். அருகில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோர் உள்ளனர்.

# ‘சமூக நீதி விடுதிகள்’...(1-ம் பக்க தொடர்ச்சி)

சார்பில் ஒரு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்களிடையே சாதி மற்றும் சமூக வேறுபாடுகள், கருத்து வேறுபாடுகள், வன்முறை உணர்வுகள் உருவாவதை தடுக்கவும், நல்லிணக்கம் மற்றும் நற்பண்புகளை வளர்க்கவும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் வகுக்கப்பட்டு உள்ளன.

## மோதல்களை தடுக்க...

பள்ளிகளில் ஏற்படும் சாதிய மோதல்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு தலைமையில் ஒரு ஆணையத்தை தமிழ்நாடு அரசு அமைத்தது. நீதியரசர் சந்துரு மிக முக்கியமான பல்வேறு பரிந்துரைகளை தமிழ்நாடு அரசுக்கு வழங்கி இருக்கிறார். சாதி முன்னொட்டு பெயர்களுடன் அரசு பள்ளிகள் இருப்பதை நீக்க வேண்டும், அரசு, தனியார் பள்ளிகளின் பெயர்களோடு உள்ள சாதி முன்னொட்டுகளையும் பின்னொட்டுகளையும் நீக்க வேண்டும் என்று இந்த ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. பள்ளியின் பெயரில் சாதி இருக்கக் கூடாது. தனிமனிதர் பெயரில் வைத்திருந்தால் அந்தப் பெயரோடும் சாதி இருக்கக் கூடாது என்று சொல்லப்பட்டு இருந்தது. இதனை தமிழ்நாடு அரசு நன்கு பரிசீலித்தது.

## பின்தங்கிய பிரிவுகளை

நமது சமுதாயத்தின் பல்வேறு பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் தொடர்ந்து கல்விப் பயின்றிட, நமது மாநிலமெங்கும் பல்வேறு அரசுத் துறைகளின்கீழ் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 727 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் 41,194 மாணவ மாணவிகளும், 455 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் 26,653 மாணவ மாணவிகளும். 157 சீர்மரபினர் விடுதிகளில் 9,372 மாணவ மாணவிகளும், 20 சிறுபான்மையினர் நல விடுதிகளில் 1,250 மாணவ மாணவிகளும் தங்கிப் பயின்று வருகின்றனர்.

## 2,739 விடுதிகளில்...

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 1,332 ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளில் 98,909 மாணவ மாணவியர்களும், 48 பழங்குடியினர் விடுதிகளில் 2,190 மாணவ மாணவியர்களும் சேர்ந்து பயின்று வருகின்றனர். இவ்வாறு மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள 2,739 விடுதிகளில் 1,79,568 மாணவ மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர். இந்த மாணவ மாணவிகளின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு நடவடிக்கைகளைக் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. இந்த மாணவர்களுக்கான உணவுச் செலவு மற்றும் பல்வேறு படிகளை உயர்த்தியது. விடுதிகளின் கட்டமைப்பு மேம்பாடு, அவர்களுக்குச் சிறப்புத் திறன் பயிற்சிகள் போன்ற பல்வேறு முன்னோடி முயற்சிகளின் காரணமாக மாணவர்களின் கற்கும் திறன் மேம்பட்டு உள்ளது.

## இன்றியமையாதது....

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள அடித்தட்டுக் குடும்பங்களைச் சார்ந்த இந்த மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் அதே வேளையில், நமது எதிர்கால சமுதாயத்தை ஒரு சமத்துவ சமூகமாக உருவாக்கிட, சாதி சமய உணர்வுகளைக் களைவது இன்றியமையாதது. இந்த நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, தற்போது பல்வேறு சாதி சமயப் பிரிவுகளின் பெயர்களின்கீழ் செயல்பட்டு வரும் மாணவர் விடுதிகளின் பெயர்களை மாற்றிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, பல்வேறு துறைகளின்கீழ் செயல்பட்டு வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் ‘சமூக நீதி விடுதிகள்’ என்ற பொதுப் பெயரால் இனி அழைக்கப்படும். விடுதிகளுக்கு புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளதே தவிர. மாணர்களுக்கான உரிமைகள், சலுகைகள், உதவிகள் அனைத்தும் அப்படியே தொடரும். அதில் எந்த மாற்றமும் இருக்காது. இவ்விடுதிகளில் நமது பெரும் தலைவர்களின் பெயர் சூட்டப்பட்டு செயல்பட்டு வரும் சில விடுதிகளும் உள்ளன. அந்த விடுதிகள் அத்தலைவர்களின் பெயரோடு சமூகநீதி விடுதி என்று சேர்த்து அழைக்கப்படும்என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# கொலை வழக்கு சி.பி.ஐ.க்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

அழைத்துச் சென்றனர். பின்னர் அன்று இரவு உறவினர்களுக்கு போலீசார் போன் மூலம் பேசி, அஜித்குமார் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். போலீசாரால் அஜித்குமார் அடித்துக்கொலை செய்யப்பட்டதாக அவரது குடும்பத்தினர் குற்றம்சாட்டினர். பிரேத பரிசோதனை அறிக்கையிலும் அஜித்குமார் கொடூரமாக தாக்கப்பட்டதில் உயிரிழந்தது கண்டறியப்பட்டது. இதையடுத்து, அஜித்குமாரை தாக்கிய தனிப்படை போலீசார் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். திருப்புவனம் இளைஞர் போலீசாரின் காவலில் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த விவகாரம் தொடர்பாக மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவின் பேரில் நீதி விசாரணையும் நடைபெற்று வருகிறது. இதற்கிடையே, திருப்புவனம் இளைஞர் கொலை வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருந்தார். கடந்த 1-ம் தேதி முதல்வர் மு.க ஸ்டாலின் அறிவித்து இருந்த நிலையில், நேற்று இந்த உத்தரவு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, விரைவில் திருப்புவனம் இளைஞர் அஜித்குமார் மரண வழக்கில் விரைவில் சிபிஐ விசாரணையை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# திருச்செந்தூர் கோவில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

மகாதீபாராதனை நடந்தது. இன்று அதிகாலை 12-ம் கால யாகசாலை பூஜை நடைபெற்றது. விழாவின் சிகர நிகழ்ச்சியான மகா கும்பாபிஷேகம் நேற்று காலை நடைபெற்றது. அதிகாலை 4 மணி அளவில் 12-ம் கால யாகசாலை பூஜைகள் நடந்தது.

அதைத் தொடர்ந்து தீபாராதனையும் பூர்ணாகுதியும் நடந்தது. அதைத் தொடர்ந்து பக்தர்களின் அரோகரா கோஷம் முழங்க கடம் புறப்பாடு தொடங்கியது. இதில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மீன்வளம் , மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உள்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கோவிலை சுற்றி வந்த கடத்திற்கு பின்னால் மேளதாளங்கள் முழங்க பக்தர்கள் கந்தனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா என கோஷமிட்டபடி பின்தொடர்ந்து வந்தனர்.

தொடர்ந்து ராஜகோ புரத்திற்கு புனித நீர் ஊற்றப்படும் கடம் கோவிலின் மேற்கு வாசல் வழியாக அமைக்கப்பட்ட தற்காலிக பாதை மூலம் ராஜகோபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அமைக்கப்பட்டுள்ள 9 கலசங்களுக்கும் சிறப்பு பூஜைகள் நடந்தது.

தொடர்ந்து காலை 6.22 மணிக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பச்சை கொடி காட்டவும் 9 கலசங்களுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடந்தது. அதைத் தொடர்ந்து கலசங்களுக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. அதே நேரத்தில் மூலவர், சண்முகம், வள்ளி, தெய்வானை, பெருமாள், நடராஜர் உள்பட பரிவார மூர்த்திகள் சன்னதிகளில் உள்ள கலசங்களுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது. விழாவில் தமிழில் மந்திரங்கள் ஓதப்பட்டது.

அப்போது பக்தர்கள் கந்தனுக்கு அரோகரா, கடம்பனுக்கு அரோகரா, முருகனுக்கு அரோகரா வேலனுக்கு அரோகரா என கோஷமிட்டது விண்ணை பிளக்கும் அளவிற்கு இருந்தது.

கும்பாபிஷேக விழாவில் அமைச்சர்கள் சேகர்பாபு, அனிதா ராதாகிருஷ்ணன், முன்னாள் மத்திய மந்திரி பொன் ராதாகிருஷ்ணன், கோவில் தக்கார் அருள் முருகன், சிருங்கேரி சாரதா பீடாதிபதி விதுசேகர பாரதி சுவாமிகள், காஞ்சி காமகோடி பீடம் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், திருவாவடு துறை ஆதீன குரு மகா சன்னிதானம், தருமை ஆதீனம் குரு மகா சன்னிதானம், வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன், ஜப்பான் நாட்டை சேர்ந்த பாலகும்பா குருமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கும்பாபிஷேக விழா நிறைவடைந்ததும் பக்தர்கள் இருந்த கடற்கரை பகுதியில் 20 ராட்சத டிரோன்கள் மூலம் பக்தர்கள் மேல் புனித நீர் தெளிக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் தலா 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒவ்வொரு டிரோன் மூலம் 3முறை பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது.

16 ஆண்டுகளுக்கு பிறகு நடந்த கும்பாபிஷேக விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு கண்குளிர பார்த்து மகிழ்ந்தனர்.